Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ புரட்டாசி 21 ஆம் நாள் ரபி'ஆகிர் 26 (7-10-61) சனிக்கிழமை இதழ் 202

★ நாவிற்கு ருசியும்
★ உடலுக்கு உறுதியும்
அளிப்பது
மொணரு அன் ரோஸ்
பப்படங்கள்
மயில், ரோஸ் மூவர் ண அடையாளங்களைக் கவனித்து வாங்குக.
கண்டிப்பகுதி விநியோகஸ்தர்கள்:
ஜெகஜோதி அன் கோ.
குருநெனியா.

# சம்பளம் கொடாத முதலாளிகளுக்கு சிறைத்தண்டனை

## சொத்துக்களும் பறிமுதலாகும்

கொழும்பு, வெள்ளி

**ஊழியர் களுக்குச் சம்பளப் பாக்கி வழங்காத முதலாளிகள் சிறைக்குச் செல்லவேண்டி நேரிடும். அத்தோடு அவர்களுடைய சொத்துக்களும் பறிமுதலாக்கப்படும்.**

இதுபோன்ற முதல் வழக்கில் ஒரு ரொட்டி தயாரிப்பாளர் ஒருவருக்குச் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டது. இவர் கோர்ட் உத்தரவுப்படி தமக்குக் கீழ் கடமையாற்றிய ஒரு ஊழியருக்கு ரூ. 1200 வழங்காததே இதற்குக் காரணமாகும்.

தொழில் இலாகா, ரொட்டி தயாரிப்பாளரின் சொத்துக்களை விற்று அந்த ஊழியரின் பாக்கியைச் செலுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

## வெடிமருந்து வெடித்ததால் இருவர் பலி

### மற்றும் இருவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

மாவிட்டபுரம், வெள்ளி

ஓர் கிணற்றுக்கு வெடிவைப்பதற்காக நான்கு நபர்கள் வெடிமருந்து செய்துகொண்டிருக்கையில் வெடிமருந்து திடீரென வெடித்ததால் இருவர் பலியானுர்கள் மற்றும் இருவர் பயங்கரநிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந் நான்கு நபர்களும் தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்தவர்கள். வல்லிநாகன் என்பவர் சம்பவம் நடைபெற்ற இடத்திலேயே அடையாளம் காணமுடியாத நிலையில் மரணமானுர். கந்தன் வேலன் என்பவர் ஆஸ்பத்திரிக்கு அபாயகரமான நிலையில் எடுத்துச் செல்லுகையில் மரணமானுர். தம்பன் பொன்னன், வல்லி சின்னத்தம்பி ஆகிய இருவரும் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார்கள்.

ஏழாலையைச் சேர்ந்த சாமிவேல் வேலுப்பிள்ளை கந்தையா என்பவர் மரணவிசாரணையின் போது சாட்சியமளிக்கையில் தனது வீட்டில் உள்ள கிணற்றை வெட்டுவதற்கு வல்லிநாகன் என்பவருக்கு கொந்தராத்துக் கொடுத்ததாகவும் அவர் தனக்குகீழ் கந்தன் வேலன், தம்பன் பொன்னன், வல்லி சின்னத்தம்பி ஆகிய மூவரையும் தனது மேற்பார்வையில்வைத்து கிணற்று வேலை செய்ததாகவும், கிணற்றுக்கு வெடிவைப்பதற்குத் தனது வீட்டு முற்றத்தில் இருந்து மருந்து கலந்துகொண்டு இருந்தார்கள் என்றும், தான் வெடி சத்தம்கேட்டு வீட்டுக்குள் இருந்துபோய் பார்த்த போது வல்லிநாகன் அடையாளம் காணமுடியாத நிலையில் 10 யார் தூரத்தில் தூக்கி எறியப்பட்டிருந்தார் என்றும் மற்ற கந்தன் வேலன் 25 யார் தூரத்தில் தூக்கி எறியப்பட்டிருந்தார் என்றும் கூறினுர்.

அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் வல்லி நாகன் தவிர்ந்த மற்ற மூவரையும் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்ததாகவும் சம்பவம் நடை நடைபெற்ற இடத்திற்கு சுன்னுகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கே. செபமாலையும் சார்சண்ட் முருகேசுவும் ஸ்தலத்திற்கு வந்து விசாரணை செய்தார்கள் என்று சாட்சி மரணவிசாரணை நடத்திய மல்லாகம் நீதிபதி W. D. தாமோதரத்திடம் கூறினுர்.

நீதிபதி தனது தீர்ப்பை ஒத்திவைத்தார்.

## சுன்னுகத்தில் வரவேற்பு

சுன்னுகம், வெள்ளி

உடுவில் பாராளுமன்ற உறுப்பினர் திரு வி. தருமலிங்கத்துக்கு சுன்னுகம் சந்தையில் அவ்வட்டார, உடுவில் கிராமச் சபை உறுப்பினர் திரு. ஆசீர்வாதம் ஹென்றி தலைமையில் மாபெரும் வரவேற்பு நடைபெற்றது.

ஆண்களும் பெண்களும் ஒன்று திரண்டு திரு. தருமலிங்கத்துக்கு பூமாலைகள் அணிந்து வரவேற்றனர்.

சுன்னுகம் வர்தகர்களும் பட்டாசு கொழுத்தி மாலைசூட்டி தமது நன்றியைத் தெரிவித்தனர்.

ஆசிரியர் சேதுகாவலர் திரு. எஸ். பொன்னம்பலம் ஆகிய பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

## டெமேரியா தோட்டத் தகராறுகள்

### சில பிரச்சினைகளில் சமரசம் ஏற்பட்டது

பதுளை, வெள்ளி

**இலங்கை தோட்டப் பொதுத் தொழிலாளர் யூனியனுக்கும் டெமேரியா தோட்ட நிர்வாகஸ்தர்களுக்குமிடையே தோட்டத் தொழிலாளர்களால் ஏற்பட்ட தகராறின் காரணமாக பசரைகுன் கிளப்பில் தொழில் உதவி கமிஷனர் திரு. ஈ. எஸ். பொன்னையா தலைமையில் மாநாடு நடைபெற்றது.**

தோட்ட நிர்வாகத்தின் சார்பாக துரை திரு. டி. டபிள்யூ. ஹோான், துரைமார் சங்கக் காரியதரிசி திரு. டிரோஸ், இ. பொ. தொ. யூனியன் சார்பாக ஜில்லா பிரதிநிதி திரு எம். எஸ். முத்தையா, யூனியன் சட்ட ஆலோசகர் திரு. டி. ஸ்ரீபத்மநாதன் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

தோட்டக் கேட்காவல் கந்தசாமி 15-7-61 ல் இருந்து தோட்டத் துரையால் வேலை நீக்கம் செய்ததுபற்றி சமரசம் காண முடியாமல் பிரச்சினையைத் தொழில் கோர்ட்டுக்கு எடுத்துச் செல்வதென யூனியன் சார்பாகத் தெரிவிக்கப்பட்டது.

தொழிலாளர்கள் திரு. டி. ஆர். வேலு, திரு. கொப அடைக்கலம், திரு. பண்டாரம் ஆகியவர்களுக்குத் தோட்டம் விட்டுப் போகத் துரையால் கொடுக்கப்பட்ட ஒரு மாத நோட்டீஸை வாபஸ் பெறும்படி பேசப்பட்டதில் சமரஸம் ஏற்படாமல் பிரச்சினையைத் தொழில் கோர்ட்டுக்குக் கொண்டு போவதெனயூனியன் சார்பாகக் கூறப்பட்டது

திரு. பாலன் கங்காணிக்குப் பென்ஷன் கொடுத்தும் அவர் கணக்கில் இருந்து வந்த ஆட்களை தோட்டப் பிரட்டில் வைத்துக்கொள்வதென தோட்டத் துரையால் முடிவு செய்யப்பட்டிருந்ததும் சமரஸமாகத் தீர்த்து வைக்கப்பட்டு பாலன் கங்காணியைச் சேர்ந்தவர்களை அவர் கணக்கிலே வைத்துக்கொள்வதென தோட்டத் துரையால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

விவாகமாகிய பெண் தொழிலாளர்கள் திருமதி அஞ்சலை, திருமதி பஞ்சவர்ணம் ஆகியவர்களுக்குப் பேர் பதிந்து தோட்டத்தில் வேலை கொடுக்காமலிருந்து வந்ததை சமரஸ

(5ம் பக்கம் பார்க்க)

## 3 சங்கங்கள் ஆட்சேபம்

கொழும்பு, வெள்ளி

"வேலைநீக்கம் செய்வதுபற்றி தீர்மானிப்பது நிர்வாகத்தினரைப் பொறுத்த விஷயமே. சங்கங்கள் இதுபற்றிக் கேட்க முடியாது" என எயர் சிலோன் நிர்வாகத்தினர் தெரிவித்திருந்த கருத்தை 3 சங்கங்கள் ஆட்சேபித்துள்ளன.

## கொழும்பு நூல்நிலையம் சீர்கெடுகிறது

கொழும்பு, வெள்ளி

கொழும்பு பொது நூல்நிலையத்தில் திருட்டு முதலிய தீய செயல்கள் இடம்பெற்றுவருவதாகத் தெரிகிறது.

இங்குள்ள பலபுத்தகங்கள் கிறுக்கப்பட்டுள்ளதாகவும், அதிகமாக ஆபாச வார்த்தைகள் இப்புத்தகங்களில் எழுதப்பட்டிருப்பதாகவும்சிலபுத்தகங்களில்முக்கியமானபகுதிகள் கொண்ட தாள்கள் கிழிக்கப்பட்டிருப்பதாகவும் நூல்நிலையப் பொறுப்பாளர் திருமதி ஈஸ்வரிகொரியா தெரிவித்துள்ளார்

## காங்கேசன்துறையில் உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல்

மாவிட்டபுரம், வெள்ளி

உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. வி. பீ. வாம்பெக் இன்று காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்துக்கு விஜயம் செய்தார். பொலிஸ் அணிவகுப்பு, பொலிஸ் நிலையக் கட்டிடம், பொலிசார் உடை ஆகியவற்றை அவர் பார்வையிட்டார். நாளை அவர் கொழும்பு திரும்புவார். திரு. வாம்பெக் வடமாகாணத்துக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாகும்.

## 35 வருடங்களின் பின் கொழும்பில் பலத்த மழை

கொழும்பு, வெள்ளி

கடந்த 35 வருடங்களின்பின் கொழும்பில் இவ்வருடம்தான் ஆகக்கூடுதலான மழை பெய்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்குமுன் 1926-ம்ஆண்டில் 65.80 அங்குல மழை பெய்ததாகவும் இவ்வருடம் 64 அங்குல மழை பெய்திருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

## அலிகார் நிலைமை

புதுடில்லி, அக். 6

அலிகாரிலுள்ள நிலைமையை அறிந்து வரும் பொருட்டு மத்திய அரசாங்க மந்திரிகளான திரு. ஸ்ரீமாலி, திரு. தத்தார், திரு. ஷாநவாய்வான் ஆகியோர் அங்கு சென்றிருக்கின்றனர். அங்கு ஊரடங்கு உத்தரவு நீடித்து வைக்கப்பட்டுள்ளது. அலிகார் சர்வகலாசாலை மாணவர்கள் பத்திரமாய் இருப்பதாகத் துணைவேந்தர் அறிவித்திருக்கிறார்.

## ஐ. நா. வில் சிரியாவின் அங்கத்துவ கோரிக்கை

### தாம் எதிர்க்கப்போவதில்லை என்கிறார் நாஸர்!

கெய்ரோ, அக். 6

**ஐ. நா.விலும், அரபுலீக்கிலும் அங்கத்தினராய்ச் சேர, சிரியா செய்யும் விண்ணப்பத்தைத் தாம் எதிர்க்கப்போவதில்லை என ஜனாதிபதி நாஸர், இன்று கெய்ரோ ரேடியோவில் பேசும் போது குறிப்பிட்டார். சிரியாவை எந்தநாடும் அங்கீகரிப்பதையும் தாம் எதிர்க்கப்போவதில்லை என அவர் கூறினுர்.**

ஜனாதிபதி நாஸரின் இந்த அறிவிப்பு உண்மையான பெருந்தன்மையைக் காட்டுகிறது என ஐ. நா.விலுள்ள இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி திரு. ஜா கூறினுர்.

1958-ம் ஆண்டு ஐக்கிய அரபியக் குடியரசுடன் இணைந்ததால் தாம் இழந்த ஸ்தானத்தை, சிரியா மீண்டும் கோரினுல், அதை எதிர்ப்பதற்கில்லை என ஐ. நா. வட்டாரங்களில் கருத்து நிலவுகிறது. இது சம்பந்தமாக ஐக்கிய அரபியக் குடியரசின் வெளிநாட்டு மந்திரி திரு. பௌஸி, அடுத்த வாரம் ஐ. நா.வில் சொற்பொழிவு நிகழ்த்துவார் எனவும் அறிவிக்கப்பட்டது.

### அறிவித்தல்

யாழ்ப்பாணம் திருநெல்வேலியிலிருக்கும் திரு. குருசாமி தனபாலசிங்கம் எங்களது யாழ் இன்டஸ்றீஸ் ஸ்தாபனத்தின் "யாழ் சோப்" விற்பனவுக்கு யாழ்ப்பாண மாவட்ட வியாபாரப் பொறுப்பாளராக இம் மாதம் நாலாம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை இத்தால் அறியத்தருகிறோம். யாழ் இன்டஸ்றீஸ் லிமிட்டெட், 97, மாணிப்பாய் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரு. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரு. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### நன்றி நவிலல்

சங்கரப்பிள்ளை: அவர்களின் மரணச் சடங்கில் பங்குபற்றிய நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ராஜரத்தினம், புன்னாலைக்கட்டுவன்.

### வாடகைக்கு

சகல வசதிகளுடன் கூடிய ஆறு அறைகளையுடைய வீடு தலையாளி கொக்குவிலில் வாடகைக்கு உண்டு. விபரங்கட்கு: க. சிவானந்தன், தலையாளி, கொக்குவில்.

### வைத்தியம்

வாதம், மூலம், நீரிழிவு, மருத்தீடு, கிரந்தி, பெண்களுக்கு ஏற்படும் வலி உபாதை குணப்படுத்த உத்தரவாதம். வைத்தியர் பரமானந்தம், 16, அரச வீதி, நல்லூர்.

### அறிவித்தல்

எங்கள் ஸ்தாபனத்தில் கடமையாற்றிய, வடபகுதி பப்ளிக் றிலேசன் உத்தியோகஸ்தர் (Public Relation Officer) திரு. P. பாலச்சந்திரன் என்பவர எங்கள் ஸ்தாபனத்திலிருந்து விலகிக் கொண்டார். ஆகவே அவருடன் ஸ்தாபன ரீதியாக வைத்துக்கொள்ளும் தொடர்புகளுக்கு நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல என்பதை இத்தால் சகலருக்கும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்
சாமுவேல் சன்ஸ் அன் கோ, லிமிட்டெட்.
கொழும்பு—கிளைகள்.

### முறிவு நோவு

பூட்டு விலகல், சவ்வுப் பிரிவு, களுக்கு முதலியவைக்கு. சிறந்த சிகிச்சை செய்யப்படும்.

பிற இடங்களுக்கு வி. பி. பி. மூலம் எண்ணை, மருந்து வகைகள் அனுப்பப்படும்.

ஒட்டகப்புலம்
ஆயுர்வேத வைத்தியர்
ஏ. எம். பொன்னையா
சமத்தர்
எல். ஐ. எம்.

வைத்திய நிலையம்,
23 | 2, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

**வியாபாரம்பெருக**
**விளம்பரம்செய்க**


# பண்பை வளர்க்கும் இலக்கியங்களை பயில வேண்டும்

## மாணவர் இலக்கிய மன்றத்தில் அறிவுரை

காத்தான்குடி, புதன்

"ஒரு சமூகம் திருந்த, அவர்கள் அறிவு மங்காது பிரகாசிக்கச் சிறந்த கல்வி அறிவுவேண்டும். இந்த அறிவை வெறும் பாடப்புத்தகத்திலிருந்து மட்டும் மாணவர்கள் பெற்றுவிட முடியாது. மேலான இலக்கியங்களையும், பெரியார்களது சீரிய வாழ்க்கை ஏடுகளையும் நாம் படிக்கத் தவறக் கூடாது. இதற்காகப் பாட நேரம் தவிர்ந்த ஓய்வு நேரங்களைப் பயன்படுத்த வேண்டும். பக்தியை ஊட்டிப் பண்பை வளர்க்கும் இலக்கியங்களை படிப்பதை முக்கிய கடமையாகக் கொள்ளவேண்டும். முத்தமிழ் முனிவன் விபுலானந்தன் அடிச்சுவட்டைப் பின்பற்றி முத்தமிழ் சேவை செய்ய நாம் பின்னிற்கக் கூடாது."

இவ்வாறு கல்லடி உப்போடை இ. கி. ச. மகளிர் பாடசாலையில் நடை. பெற்ற இலக்கிய மன்றத்துக்குத் தலைமை தாங்கிய திரு. வீ வேலுபிள்ளை ஆசிரியர் குறிப்பிட்டார்.

பின்வருவோர் புதுவருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்:-திரு. வீ. வேலுப்பிள்ளை. போஷகர்:- சுவாமி நடராஜானந்தஜீ. செயலாளர்:- செல்வி த. தம்பிராசா. உப செளலாளர்:- செல்வி க. கதிரமலை.

### பத்திரிகைக் குழு

நிருவாக ஆசிரியர்:-திரு. இ இராஜதுரை. உதவி ஆசிரியர்:- செல்வி த. பொன்னையா. செயற்குழு:- செல்வி அ. செல்லையா, செல்வி பூ. மூத்ததம்பி, செல்வி செ. செல்வராசா செல்வி த. கிருஷ்ணபிள்ளை, செல்வி க. தம்பிப்பிள்ளை.

## கிராம மக்களுக்கு சுகாதாரக் கல்வி

கொழும்பு, வெள்ளி

சுகாதார இலாகா இன்று கிராமத்திலுள்ள மக்களுக்குச் சுகாதாரக் கல்வி பயிற்றுவிக்கும் பரீட்சார்த்த முயற்சியை ஆரம்பிக்கும்.

எவ்விதம் தொற்று நோய் பரவாது தடுக்கலாம் எனக் கிராமத் தலைவர்களுக்கு இலாகா தெரிவிக்க எண்ணியுள்ளது.

ஹிங்குருகொடையில் இன்று காலை 10 மணிக்கு சுகாதாரத்தைப் பேணுவது சம்பந்தமான கருத்துக்களை அப்பகுதியிலுள்ளவர்கள் அறிவதற்கான ஒரு மகாநாடு ஆரம்பமாகும். மூன்று நாட்கள்வரை தொடர்ந்து நடைபெறும் இம் மகாநாட்டில் பொலனறுவைப் பகுதியிலிருந்து நூற்றுக்கணக்கான தலைவர்கள் கலந்து கொள்வார்களென மதிப்பிடப்பட்டுள்ளது.

இம்மகாநாட்டைச் சுகாதா. மந்திரி திரு. ஏ. பி. ஜயசூரியா ஆரம்பித்து வைப்பார்.

## சிவசங்கர பண்டிதர் நினைவு

யாழ்ப்பாணம் வெள்ளி

நீர்வேலி சிவசங்கர பண்டிதரின் நினைவு நாளை முன்னிட்டு அன்னாரைப் பற்றி சுன்னாகம் திரு. கு. அம்பலவாணர் 5-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு இலங்கை வானொலியில் பேசுகிறார்.

# வீட்டுக்கு வீடு இணைப்பு உத்தியோகத்தர்

## செய்திப் பற்றுக் குறையைப் போக்க அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, வெள்ளி

அமைச்சுகளிலிருந்தும்இலாக்காக்களிடமிருந்தும் கிடைக்கும் அரசாங்க கருமங்கள் சம்பந்தமான செய்திகள் போதாமலிருப்பதாக இலங்கை வானொலி அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர். இவ் விஷயம் அண்மையில் கல்வி வானொலி அமைச்சரால் கூட்டப்பட்ட மாநாடொன்றின் போது அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

அரசாங்கக் கருமங்கள் சம்பந்தமாக இலங்கை வானொலி மூலம் ஒலிபரப்பப்படும் செய்திகள் போதாமலிருப்பதுபற்றி இந்த மாநாடு விவாதித்தது. கல்வி வானொலி அமைச்சைச் சேர்ந்த மேலதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர்.

செய்திகளையும் செய்தித் தொடர்புகளையும் பத்திரிகைகளுக்குச் கொடுக்கும்போது அதேநேரத்தில் அவைகளை இலங்கை வானொலிக்கும் தருவதை இலாக்காக்கள் மறந்து விடுவதாகவும் வானொலி அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இலங்கைவானொலிநிருபர்கள் செய்திகள் எடுப்பதற்குஅதிகாரிகளிடம் சென்றால் அவர்கள் இங்கு அங்கு எனதபடி அனுப்பப்பட்டு அதுவே கஷ்டமான ஒருவேலையாக வந்துவிட்டதாகவும் தெரிவித்தனர்.

கல்வி வானொலி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி மற்றைய அமைச்சினதும் நிரந்தரக் காரியதரிசிகளுக்கும் ஓர் சுற்று நிருபத்தை அனுப்பிவைத்துள்ளார்.

ஒவ்வொரு அமைச்சிலும் இலங்கை வானொலிக்குச் செய்திகள் கொடுக்க ஒவ்வொரு இணைப்பு அதிகாரியை நியமிக்குமாறு கல்வி வானொலி அமைச்சர் கேட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடலில் காலை இழந்தார்!

கொழும்பு, வெள்ளி

கொழும்புத்துறைமுகத்தில் சிறு படகில் மாலுமியாகக் கடமையாற்றி வந்த டி.ஜி. எம். பெலில்(45) என்பவர் கயிற்றை இழக்கிக் கொண்டிருக்கையில் அவரது இடது கால் சிக்குண்டதால் இடது காலை இழந்தார். அவரது இடது காலின் கீழ் பாகம் கடலுள் விழுந்ததாகத் தெரிகிறது.

## விளையாட்டு செய்திகள்

மாவிட்டபுரம், வியாழன்

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி 2-ம் பிரிவுக்கோஷ்டிக்கும், கொக்குவில் இந்துக்கல்லூரி 2-ம் பிரிவுக் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் கொக்குவில் இந்துக்கல்லூரி 7கோல்களால் வெற்றியீட்டியது. யூனியன் ஒரு கோலும் போடவில்லை.

∴ ∴ ∴

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 1-ம் பிரிவுக்கோஷ்டிக்கும் கொக்குவில் இந்துக்கல்லூரி 1-ம் பிரிவுக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் யூனியன் கல்லூரி 3 கோல்களால் வெட்றியீட்டியது. கொக்குவில் இந்துக்கல்லூரி ஒரு கோலும் போடவில்லை.

∴ ∴ ∴

உடுப்பிட்டி, வெள்ளி

வியாழன் பிற்பகல் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிக்கும், வதிரி பொம்பேஸ் விளையாட்டுக் கழகத்தினருக்கும் இடையில் நடந்த சிநேக பூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் வதிரி வீரர் 2-0 கோல்களால் விக்னேஸ்வராவைத் தோற்கடித்தனர்.

∴ ∴ ∴

உடுப்பிட்டி, வெள்ளி

இம்மாதம் நடுப்பகுதியில் ஆரம்பமாகவிருக்கும் வடமராட்சி ஆசிரியர் சங்கப் பாடசாலைகளின் உதைபந்தாட்டப் போட்டியில் வதிரி திரு இருதயக்கல்லூரி, நெல்லியடி அரசினர் மத்தியமகாவித்தியாலயம் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, தேவரையாளி இந்துக் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி, கட்டைவேலி ஞானசாரியர் இந்துக்கல்லூரி ஆகியன பங்குபற்றவிருக்கின்றன. இச் சங்கம் வழங்கும் வெற்றிக் கேடயத்தை 1959, 1960-ம் ஆண்டுகளில் தேவரையாளி இந்துக்கல்லூரி பெற்றது. இம்முறையும் அவர்கள் வெற்றியீட்டினால் வெற்றிக்கேடயம் நிரந்தரமாக அக்கல்லூரிக்கே அளிக்கப்படுமெனத் தெரிகிறது.

போட்டிகளுக்கானபூர்வாங்க ஏற்பாடுகளை வட ஆசிரியர் சங்கச்செயலாளர் திரு. இராஜநாயகம் மேற்கொண்டிருக்கிறார்.

∴ ∴ ∴

மகாஜனக்கல்லூரி 2-ம்பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், ஹாட்லிக்கல்லூரி 2-ம் பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் ஹாட்லிக்கல்லூரி 3 கோல்களால் மகாஜனக்கல்லூரியைத் தோற்கடித்தது.

∴ ∴ ∴

மாவிட்டபுரம், வியாழன்

மகாஜனக்கல்லூரி 1-ம் பிரிவுக் கோஷ்டிக்கும் ஹாட்லிக் கல்லூரி 1-ம் பிரிவுக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் மகாஜனக்கல்லூரி 1 கோலால் ஹாட்லியைத் தோற்கடித்தது.

∴ ∴ ∴

மாவிட்டபுரம், வியாழன்

உடுவில் மகளிர் கல்லூரி 2ம் பிரிவு வலைப்பந்தாட்டக்கோஷ்டிக்கும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 2-ம் பிரிவுக் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் உடுவில் கோஷ்டி 16 கோல்களால் வெற்றியீட்டியது.

∴ ∴ ∴

சுன்னாகம், வெள்ளி

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி பி. பிரிவுக்கும் சுன்னாகம் யொலிஸ்ராற் கிளப் பி. பிரிவுக்குமிடையில் நடந்த சிநேக பூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் ஸ்கந்தவரோதயக்கல்லூரி 7-0 கோல்கள் போட்டு யொலிஸ்ராற் கிளப்பைத் தோற்கடித்தது. மத்தியஸ்தராக திரு. செந்தில்நாதன் கடமையாற்றினர்.



## பரிசுபெற்ற எழுத்தாளருக்கு பாராட்டு

### காரைநகரில் 8-ந் திகதி நடைபெறும்

காரைநகர், வெள்ளி

இலங்கை சாகித்திய மண்டலத்தின் பரிசு பெற்ற பதிற்றுப்பத்து ஆசிரியர் பண்டிதர் சு. அருளம்பலவனாருக்கு ஒரு பாராட்டு விழா இம்மாதம் 8-ந் திகதி இலங்கைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி கே. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவிருக்கிறது. காரைநகர் இந்துக் கல்லூரி நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும். இவ் விழாவில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை உட்பட பலர் சொற்பொழிவாற்றுகின்றனர்.

அவ்வமயம் பரிசுபெற்ற எழுத்தாளருக்குப் பொன்னாடை போர்த்தி பொற்கிழி வழங்கியும் கௌரவிக்கப்படும்.

## கிளிநொச்சி எம். பி.க்கு

### புகையிரத நிலையத்தில் குதூகல வரவேற்பு

கிளிநொச்சி, வெள்ளி

கடந்த வியாழக்கிழமை தடுப்புக் காவலிலிருந்து விடுதலை பெற்று வந்திறங்கிய கிளிநொச்சி எம். பி. திரு. ஏ. சிவசுந்தரத்தைக் கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் ஆயிரக் கணக்கான மக்கள் கூடி நின்று வரவேற்றனர்.

கரைச்சி கி. ச. தலைவர் திரு அன்ரன் சி. பொன்னம்பலம் உட்பட பலர் எம். பி.யை மாலை சூட்டி வரவேற்று ஊர்வலமாக அவர் வீட்டுக்கு அழைத்துச் சென்றனர்.

175 தினங்களின்பின் தனது பிள்ளைகளையும் மனைவியையும் நண்பர்களையும் கண்டு உருக்கமாகப் பேசிக் கொண்ட எம் பி.யை கண்காணிப்பதற்காகப் பொலிசாரும் திரண்டிருந்தனர்.

## லாபத்தில் புதிய 'வார்ட்'

### கூட்டுறவு ஆஸ்பத்திரி சபை முடிவு

வட்டுக்கோட்டை, வெள்ளி

1959—1960-ம் வருடத்தில் மூளாய் ஆஸ்பத்திரியில் கிடைத்த இலாபத் தொகை ரூபா 46,258-22ல் ரூபா 20,186-76ஐ வார்ட் கட்டுவதற்கான ஆரம்ப வேலை களைச்சய்ய ஒதுக்கப்பட வேண்டுமென மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரியின் அதிகாரசபை அங்கத்தவர் திரு. பி. நடுநாயகத்தினால் கொண்டுவரப்பட்ட பிரேரணை இத ஆஸ்பத்திரியின் 25-வது வருடாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

# "மொழிகள் இணைப்புச் சங்கிலியாக இருக்கவேண்டும்"

## "பிரிக்கும் சுவராக இருக்கக் கூடாது"

### மதுரை வரவேற்பில் தேசிய ஒற்றுமை பற்றி நேருஜி

மதுரை, அக். 6

"'கோடிக்கணக்கான இந்திய மக்கள் தங்கள் சமுதாயத்திலிருந்து வறுமையை அகற்றுமுகமாக மாபெரும் யாத்திரை ஒன்றை ஆரம்பித்திருக்கிறார்கள்" என பிரதம மந்திரி நேரு, தமக்கு மதுரை குதிரைப்பந்தய மைதானத்தில் அளிக்கப்பட்ட பிரமாண்டமான பொது வரவேற்பில் பேசும்போது குறிப்பிட்டார்.

இக்கூட்டத்திற்கு பிரதமர் நேரு, நிதிமந்திரி திரு. சுப்ரமண்யத்துடன் வந்தபோது, முதல்மந்திரி காமராஜ் அவரை வரவேற்றார். நேருஜியின் பேச்சை திரு. ஓ. வி. அழகேசன் தமிழில் மொழிபெயர்த்தார்.

"இந்திய மக்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகவே ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு யாத்திரை செய்துவருகிறார்கள். தென்னாட்டிலிருந்து வடக்கேயுள்ள பத்திரிநாத்துக்கும் அமர்நாத்துக்கும் தெய்வ வழிபாட்டுக்காக அவர்கள் சென்றார்கள். அதேபோல் வடக்கேயிருந்து தென்னாட்டிலுள்ள கன்னியாகுமரி, ராமேஸ்வரம் ஆகிய ஸ்தலங்களுக்கு யாத்திரைவருகிறார்கள். இவையெல்லாம் நாம் ஒருநாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதைப் புலப்படுத்துகின்றன.

சரித்திரகாலத்தில் இந்நாட்டில் பல மன்னர்கள் பல ராஜ்யங்களை ஆண்டுவந்தார்கள். ஆயினும் ஒருதேசத்தைச்சேர்ந்தவர்கள் என்ற எண்ணத்தோடுதான் இந்த யாத்திரைகள் நடைபெற்று வந்தன" என்றும் நேருஜி குறிப்பிட்டார்.

'அரசியல், மொழி, மத வேறுபாடுகளிருக்கலாம். ஆயினும் இமயம் முதல் குமரிவரை ஒரேநாடு இந்தியா என்பதை பலவகைகளிலும் பார்க்கிறோம்.

அந்தந்தப்பகுதியில் வாழும் மக்களுக்குத்தான் அந்தந்தப் பகுதி சொந்தம் எனக் கூற முடியாது. நான் வடக்கிலிருந்து வந்திருக்கிறேன். கன்னியாகுமரி எனக்குச்சொந்தமானது. அதேபோல் இமயமலையும் உங்களுக்குச்சொந்தமானது. இந்தியா இந்திய மக்களுக்குச் சொந்தமானது. நம் அனைவரையும் பொதுக் கலாச்சாரம் ஒன்றாகப் பிணைக்கிறது. பூகோள, சரித்திர, கலாச்சார ரீதியில் பார்த்தாலும் நாடுஅனைவருக்கும்பொதுவானது. தேசியப் போராட்டத்தில் எல்லோருமே ஒன்றுபட்டோம். தனியாகப் பிரிந்து போராட்டம் நடத்தவில்லை. ஒற்றுமையுடன் பெற்ற இச்சுதந்திரத்தை அபகரிக்க நாம் அனுமதிக்கப்போவதில்லை" என்றும் இந்தியப் பிரதமர் குறிப்பிட்டார்.

"உலக ஐக்கியம், உலக சம்மேளனம், உலக அரசாங்கம் என்றெல்லாம் இப்போது பேசப்படுகிறது. உலக ஒற்றுமை பற்றியும் பேசப்படுகிறது. மகத்தான விஞ்ஞான அபிவிருத்தியின் காரணமாக உலகம்அமுங்கிவிட்டது. தூரத்தால் காலத்தால் குறைந்துவிட்டது. பூமியைத்தாண்டி வானவெளிக்கு மனிதன் சென்றுவரும் காலத்தில் முன் எப்போதையும் விட இப்போது ஒற்றுமை அவசியம். ஹிந்து, பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம், ஜைனம், பார்ஸி ஆகிய பல மதங்கள் இந்தியாவிலிருக்கின்றன. இதனால் நாம் பிரிந்த மக்கள் எனச் சொல்வதற்கில்லை. பாஷை காரணமாகவும் நாம் பிரிந்திருக்கவேண்டியதில்லை. பாஷை நம்மைப் பிணைக்கும் ஒற்றுமைச் சங்கிலியாக இருக்கவேண்டும். பிரிக்கும் சுவராக அது இருக்கக் கூடாது.

தமிழ்மொழி மிகவும் பழமையும், பெருமையும் வாய்ந்த மொழி. சமஸ்கிருத மொழியைப்போல் தொன்மையானது. ஆங்கிலத்தையும் நாம் வைத்துக்கொள்ள விரும்புகிறோம். எல்லா மதங்களும் இந்திய மதம். எல்லா மொழிகளும் இந்திய மொழிகள்.

ஜாதிமுறை பலகாலத்துக்கு முன் ஏற்பட்டது. இதனால் சமுதாயம் பலவீனமுற்றது. நம்மை அது பிரித்து வைத்தது. ஆனால் ஜாதிக்கு இப்போது சமுதாயத்தில் இடமே இல்லை. ஜனநாயகத்திலும் சோஷலிஸத்திலும் ஜாதியே இருக்கமுடியாது. சமத்துவத்தை அதிகமாக வளர்ப்பதே, அரசியல் – பொருளாதாரத்தில் சமத்துவத்தை வளர்ப்பதே ஜனநாயகம் அல்லது சோஷலிஸம் என்பதின் அர்த்தம்" என்றும் நேருஜி குறிப்பிட்டார்,

---

## நடுநிலைமை நாடுகள்

### அமெரிக்க மனப்பான்மை மாறுகிறது?

லாவோஸ், அக். 4

யு. எஸ். உதவி ஜனாதிபதி லின்டன் ஜான்ஸன் நேற்றிரவு இங்கு செய்த ஒரு பிரசங்கத்தின் தொனியையும் பார்க்குரபோது நடுநிலைமை நாடுகளின் விஷயத்தில் அமெரிக்க மனப்பான்மை மாறுகிறதாவென்று சந்தேகமே ஏற்படும்.

கம்யூனிஸ்த்தின் பயமுறுத்தல்களாலும், கெடுபிடிகளாலும் அரண்டுபோனவர்களிடம் யு. எஸ். ஒருபோதும் பணியாது என்று ஜான்ஸன் கூறினார்.

உலகிலுள்ள நடு நிலைமை நாடுகளைக் குறிப்பிட்டு ஜான்ஸன் இந்தப் பிரசங்கத்தைச் செய்தார்.

"அணு ஆயுத சோதனைகளை நடத்துவதில்லையென்று ஒப்பந்தத்தை ஒருநாடு மீறியது; அப்படி அந்த நாடு மீறிய பிறகு, முற்றிலும் தற்காப்புக்கு சில நடவடிக்கைகளை எடுத்துகொண்டது. இந்த இரண்டும் ஒன்றுதான் என்று சொல்லுபவர்களின் தீர்ப்பை நாங்கள் ஒப்புக்கொள்ளப்போவதில்லை.

அகங்காரம் பிடித்த பயமுறுத்தல் காரனுக்கு எதிராக நல்ல மனிதர்களை நாங்கள் ஒன்று சேர்ப்பது உலக சமாதானத்தைக் குலைப்பதாகும் என்ற விசித்திரமான வியாக்கியானத்தையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

இந்தக் கொள்கையைப் பின்பற்றுபவர்கள் தம்முடைய மனச்சாட்சியையே கேட்டுப் பார்க்கட்டும். ஒருவனைத் தாக்க முயலும் போக்கிரியைத் தடுக்கும் பொலிஸ்காரனும், அந்தப் போக்கிரியைப் போலவே குற்றவாளிதான் என்ற அவர்களுடைய குற்றச்சாட்டுக்கு அவர்கள் என்ன சமாதானம் சொல்லப் போகிறார்கள்.

எங்களுடைய பாதையையோ, எங்களுடைய தார்மிக நோக்கங்களையோ தாங்கள் மாற்றிக்கொள்ளப்போவதில்லை" என்று ஜான்ஸன் சொன்னார்

---

## சீன-நேபாள எல்லையில் மாற்றமில்லை

பீக்கிங், அக். 6

"பழங்காலந் தொட்டு இருந்து வந்த திபெத் நேபாள எல்லைக் கோடுகள் இன்னும் இருந்து வருகின்றன" என நேபாள மன்னர் மகேந்திரா நேற்று பீக்கிங்கில் அறிவித்தார்.

பீக்கிங்கில் சீன, நேபாள எல்லைக்கோடுகஅ சம்பந்தமான ஒப்பந்தம் பற்றிக் குறிப்பிடுகையிலேயே மன்னர் மகேந்திரா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

---

## எம். பி. க்கு வரவேற்பு

சாவகச்சேரி, வெள்ளி

அவசரகாலச் சட்டத்தின் கீழ் சென்ற ஏப்பரல் மாதம் 18-ந் திகதி கைது செய்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் விடுதலை செய்யப்பெற்று முதன் முதல் தனது தொகுதிக்கு நேற்றுஒன்றரைமணியளவில் வந்து சேர்ந்தார்.

ஆறுமாத காலமாய்ப் பிரிந்திருந்த தங்கள் பிரதிநிதியைக் கமக்காரரும், வர்த்தகர்களும் தொழிலாளரும், சுற்றத்தாரும் சாவகச்சேரி புகையிரத நிலையத்தில் திரண்டு நின்று வரவேற்றுபசரித்தனர்.

புகையிரதத்தில் நின்றுஇறங்கியதும் பலர் மாலைகள் அணிந்தனர். புகையிரத நிலையத்திலிருந்து ஊர்வலமாக எம். பியை அழைத்துச் சென்று அவர் வீட்டில் சேர்த்தனர்.

---

## பெட்ரோல் சுத்திகரிப்பு நிலையம்

### 1965ல் ஆரம்பமாகலாம்

கொழும்பு, வெள்ளி

எண்ணை சுத்திகரிப்பு பற்றி ஆராய இத்தாலி, பிரேசல்ஸ் முதலிய நாடுகளுக்கு விஜயம் சென்றிருந்த கைத்தொழில் உள்நாட்டுக் கலாசார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா நேற்று இங்கு வந்து சேர்ந்தார்.

இலங்கையில் ஒரு பெட்ரோல் சுத்திகரிப்பு நிலையத்தை 1965-ம் ஆண்டில் நிறுவலாம் எனவும் அத்துடன் கலப்பு பசளைஉற்பத்திச்சாலையும்ஆரம்பித்தால் இலங்கை பெரிதும் இலாபமடையுமெனத் தெரிவித்தார்.

இதற்கு ரூ. 25 கோடி மூலதனம் தேவையெனவும் மந்திரி குறிப்பிட்டார்.

---

## வவனியா எம். பி.

முள்ளியவளை, வெள்ளி

ஐந்தரை மாதங்களின் பின் நேற்று தனது தொகுதிக்குப் புறப்பட்ட வவனியாப் பிரதிநிதிக்கு, வவனியாவில் கோலாகலமான வரவேற்பளிக்கப்பட்டது. நேற்று மாலை தமது சொந்த ஊரான தண்ணீரூற்றுக்கு வரும் வழியில் பெருந்திரளான மக்கள் அவரை எதிர்கொண்டழைத்து, மாலை மரியாதைகளுடன் ஊர்வலமாக அழைத்து வந்தனர்.

---

# ஐ. அ. குடியரசு-சிரியா உறவு முறிவு

## ஜனாதிபதி நாஸர் அறிவிப்பு

கெய்ரோ, அக். 6

'ஐக்கிய அரபுக் குடியரசுக்கும் சிரியாவுக்குமுள்ள தொடர்பு முறிவுற்றது' என நேற்றிரவு ஐக்கிய அரபுக்குடியரசு ஜனாதிபதி கேர்ணல் நாசர் தெரிவித்தார்.

சிரியா அராபிய லீக்கில் அங்கத்துவம்பெற முனைவதையோ, ஐ. நா. வில் அங்கத்துவம்பெற முனைவதையோ தாம் ஆட்சேபிக்கப் போவதில்லையென்றும் சிரியா ஐக்கிய அரபுக் குடியரசின் ஒரு பகுதியாக இருக்கவேண்டிய அவசியமில்லை எனவும் ஜனாதிபதி நாசர் தெரிவித்தார்.

அவர் மேலும் சிரியாபற்றிக் குறிப்பிடுகையில், தனித்தன்மையைக் காப்பாற்ற சிரியாவுக்கு உரிமை உண்டு எனினும் அந்நாட்டு மக்களின் அங்கீகாரமின்றி டமாஸ்காவில் அரசாக்கம் அமைப்பது சாத்தியமாகாது எனவும் தெரிவித்தார்.

---

# தேசிய அபிவிருத்தி திட்டத்திற்கு தொண்டர் குழு

## மன்னர் மாவட்டத்தில் செயலில் இறங்கும்

மன்னார், வெள்ளி

வருகிற கார்த்திகை மாதம் இரண்டாவது வாரத்தில் தேசிய அபிவிருத்தித்திட்டத்தில் வேலை செய்யும் தொண்டர்களின் முதலாவது குழு மன்னார் மாவட்டத்தில் அபிவிருத்தியடையாத வயல்களில் நெற்பயிர்களை நாற்று நடுமலுவலில் அயராது உழைக்கவிருக்கிறது. இதனுடன் ஊர்த்தொண்டர் குழுவும் சேர்ந்து உதவுமென எதிர்பார்க்கப் படுகிறது.

கட்டாந்தரையாகவும் அபிவிருத்தியடையாமலும் மிகப் பரந்த ஏக்கர் நிலம் கைவிடப்பட்டதைத் தொடர்ந்து இப்பணியியைச் தேசிய அபிவிருத்திப்பணியின்கீழ் அமையவேண்டுமென முன்னாள் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபராகவும் தற்போது காணிப் பகுதியின் உதவிடைரக்டராகவும் விளங்கும் திரு. டீ. ஜே. எவ். டி. லியனகே குறிப்பிட்டுள்ளார்.

தொண்டர் குழுவுக்கு இலவசப் பிரயாணவசதியும் உணவும் கொடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

# மயிலிட்டிக்கு விஜயம் செய்த செக். எழுத்தாளர்கள்

## பிரமுகர்கள் வரவேற்பு

மாவிட்டபுரம், வியாழன்

தற்போது இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கும் செக்கோஸ்லேவியாவைச் சேர்ந்த நான்கு பிரபல எழுத்தாளர்களான மிரஸ்லாவ்விக்மன்ட், ரிறி கான்செல்க்கா, எம். டிறியக், ரி. கொறியன்ரா, ஆகிய நால்வரும் வட மாகாணத்துக்கு விஜய செய்து சரித்திர சம்பந்தப்பட்ட இடங்களையும் மற்றும் முக்கிய இடங்களையும் பார்வையிட்டனர். இலங்கையின் முக்கிய மீன்பிடிதுறை முகங்களில் ஒன்றான மயிலிட்டிக்கு இவர்கள் விஜயம் செய்தபோது அகில இலங்கை கயூனிஸ்ட் கட்சியின் வலிகாமம் வடக்கு, கிழக்கு காரியதரிசி திரு. வி. பொன்னம்பலமும், காங்கேசன்துறை பட்டின சபையின் உபதலைவர் திரு. எஸ். சிவனடியார் ஆகியோர் வரவேற்றனர்.

இவ் எழுத்தாளர் கோஷ்டியினர் சுமார் 7 வருடங்களுக்கு முன் தங்கள் நாட்டில் இருந்து புறப்பட்டு இச் சுற்றுப்பிரயாணத்தை மேற்கொண்டுள்ளனர். இவர்கள் இதுவரை 66 நாடுகளுக்கு சென்று அந்நாடுகளைப் பற்றிய சமுக, பொருளாதார நிலைமையை ஆராய்ந்துள்ளனர். இலங்கை இவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்யும் 67-வது நாடாகும்.

இலங்கையில் இவர்கள் மூன்று மாதகாலம்வரை தங்குவர். இம் மூன்று மாதகாலத்திற்குள் இலங்கையின் சமுக பொருளாதாரம் பற்றி இவர்கள் ஆராய்வர்.

இலங்கையில் பனைமரத்தால் உண்டாகும் நன்மைகள், கடற்றொழிலாளர், கமக்காரர், புகையிலை உற்பத்தி செய்வோர் ஆகிய நான்கையும் அடிப்படையாகக் கொண்டு இலங்கை பற்றி ஓர் புத்தகத்தை தாங்கள் வெளியிடப் போவதாக இவர்கள் நமது நிருபரிடம் கூறினர்.

இவ் எழுத்தாளர் கோஷ்டியினர் அடுத்தபடியாக இந்தோனேஷியாவுக்கும் விஜயம் செய்வார்கள்.

---

## எயர்சிலோன் பி. ஓ. ஏ. ஸி. ஒப்பந்தம்

கொழும்பு, வெள்ளி

எயர்சிலோனுக்கும் பி. ஓ. ஏ. ஸிக்கும் நேற்றிரவு நடைபெற்ற ஒப்பந்தத்தின் பேரில் வாரத்துக்கொரு தடவை எயர்சிலோனுக்கு கொமட் விமானத்தை பி. ஓ. ஏ. ஸி. வாடகைக்குக் கொடுப்பதென ஏற்பாடாகியுள்ளது.

இந்த விமானம் கொழும்பிலிருந்து லண்டனுக்கும் கொழும்பிலிருந்து சிங்கப்பூர் செல்லவும் பயன்படுத்தப் படும்.

சர்வதேச கார்ப்பரேஷனின் விமானத்தொடர்பு ஒப்பந்தம் இதுஎனக் கருதப்பட்டுள்ளது.

**மணி வாக்கு**

"தவமொன்று மில்லை யொரு
சாதனையு மில்லையடா!
சிவமொன்றே யுள்ள தெனச்
சிந்தை செய்தாற் போதுமடா"
— அமரகவிபாரதியார்

ஈழநாடு
EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
புரட்டாசி மீ 21 உ (7-10-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.

## தொழிலும் சாதியும்

மண்பாண்டத்தொழில், தச்சுத்தொழில் போன்றவற்றில் தங்கள் குழந்தைகள் பயிற்சி பெறுவதை பெற்றோர்கள் தாழ்வாக நினைக்கக்கூடாதென்றும், அவ்வித தொழில்கள் குழந்தைகளின் கைத்திறனையும், புத்திக்கூர்மையையும் வளர்க்கிறதென்றும் கல்வி இலாகா டைரக்டர் எஸ். எப். டி. சில்வா, ஒரு பள்ளிக்கூட பரிசளிப்பு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் சரியாக அறிவுறுத்தினார்.

ஒரு தொழிலை ஒரு குறிப்பிட்ட சாதியினரே செய்ய வேண்டுமென்றும் ஒரு சாதியின் தொழிலை வேறு சாதியினர் செய்வது தாழ்வென்றும் ஒரு மனப்பிராந்தி பொதுவாக நிலவுகின்றது. இவ்வித சாதி உயர்வு தாழ்வு மனப்பிராந்தி சிறுகச்சிறுக மறைந்துவருகிறதென்றாலும் பூரணமாக நீங்கிலலே, நாட்டில் வேலையில்லாக் கஷ்டம் நீங்கவும், சமரச எண்ணங்கள் பரவி, ஒற்றுமை ஏற்படவும், நாட்டின் பொருளாதாரம் வளரவும் வழிபிறக்க முடியும்.

மதுரையிலே பாரதப் பிரதமர் நேருஜி பெரிய பொதுக் கூட்டத்தில் பேசுகையில், சாதி உயர்வு தாழ்வு எண்ணங்களும் வேற்றுமைகளும், ஜனநாயகத்துக்கும், சமதர்மத்துக்கும் மாறுகுமென்றும், சமத்துவம், சமரசம் இவற்றை வளர்க்க வேண்டிய இக்காலத்தில், சாதி உயர்வு தாழ்வு வேற்றுமைகளுக்கு இடமில்லை என்று இடித்துக்கூறினார்கள். அவர் கூறிய யோசனை இலங்கையிலுள்ள நமக்கும் பெரிதும் பொருந்துவதாகவும் பயன்படுவதாகவுமிருக்கவேண்டும்.

தொழில் அடிப்படையிலேயே சாதிகள் முன் எப்போதோ வகுக்கப்பட்டன. ஒரு தொழிலை ஒரு குறிப்பிட்ட சாதியினரே செய்யவேண்டுமென்ற நியதி இருந்தது. பல்வேறு தொழில்களும் சமுகத்துக்குமுக்கியமானவையேயாதலால் அந்தக்காலத்திலும்கூட தொழில்களுக்கிடையே உயர்வு தாழ்வென்பது இருந்திருக்க முடியாது.

ஒரு குறிப்பிட்ட சாதியினரே, ஒரு குறிப்பிட்ட தொழிலைச் செய்வதென்ற முறையிலே வேலையில்லாக் கஷ்டங்களும் இல்லாதிருந் திருக்கலாம். ஆனால் இக்காலத்திலோ நிலைமை அடியோடு மாறிவிட்டது. வர்த்தகத்தை யாரும் செய்கின்றனர். இதைத்தடுப்பதற்கில்லை. தொழில்களில் பழைய ஒழுங்குகள் சீர்குலைந்ததாலும் கைத்தொழில்களுக்குக் குறைந்த வருவாயும் பேனைத் தொழிலுக்கு அதிக வருவாயும் மதிப்பும் அளிக்கப்பட்டுதாலும், கைத்தொழிலை விட்டு விட்டு பலரும் குமாஸ்தா தொழிலுக்குப் போட்டிபோடுகின்றனர். இதனால் வேலையில்லாக் கஷ்டங்கள் ஏற்பட்டு, நமது வாலிபர்களில் பெரும்பாலோரின் நிலை திகைப்புக்குள்ளாகிறது.

மகாத்மாகாந்தி இதை நன்குணர்ந்து, கதர், கிராமக்கைத் தொழில் இவற்றை அபிவிருத்தி செய்ய [illegible]டுபட்டார்.

இந்த நிர்மாண ஆக்கவேலைகளை இப்போது அரசாங்கமே மேற்கொண்டு செய்ய முன் வந்துள்ளது. பொதுமக்களின் ஒத்துழைப்பு பூரணமாக இருந்தாலே இதனால் நல்ல பயன் ஏற்படமுடியும். தொழிலில் உயர்வு, தாழ்வு எண்ணங்களை விட்டு, தங்களுக்கு உகந்த தொழில்களை கற்றுக்கொண்டவர்கள், வேலையில்லாக் கஷ்டத்தால் தவிக்காமல், வாழ்க்கையை சுதந்திரத்துடன் நடத்த அதிக வாய்ப்புப்பெற்றவர்களாவர்.

யாழ்ப்பாணத்திலே கைத்தொழில் பயிற்சி ஸ்தாபனம் ஒன்றை பெரும் பணச்செலவில் ஆரம்பித்த அன்பர் ஒருவர் தச்சுத்தொழில் பகுதியை சமீபத்தில் மூடவேண்டி ஏற்பட்டதாகவும், தச்சுத்தொழில் பழகுவது தங்கள் சாதிக்கு இழுக்கென்று நினைத்து, வாலிபர் பலர் முன்வரவில்லை என்றும் வருத்தத்துடன் தெரிவித்தார். இவ்வித மனப்பான்மையை விட்டு, எல்லாத் தொழில்களையும் சமமாக மதித்து, கூடுமானவரை ஒரு தொழிலாவது தங்கள் புதல்வர்கள் பயிற்சி பெறும்படி பெற்றோர்கள் பார்த்துக்கொள்வது தங்கள் குழந்தைகளுக்குச்செய்யும் நன்மையாவதுடன் நாடும் முன்னேற வழிசெய்வதாகும்.

### வினோபாஜி இலக்கிய நினைவு: (2)

# விருப்பு,வெறுப்புகளிலிருந்து எழுத்தாளர் விலகிக்கொள்ளல் வேண்டும்

— ஆச்சாரியா வினோபாஜி —

இலக்கியச் சிருஷ்டிகளை நன்கு பார்க்கக்கூடிய இடத்தில் நின்று பார்த்து வரவேண்டும். இவ்வாறு அருகில் நின்று, ஆனால் விலகியதுபோல் இருந்து பார்ப்பவரை கீதையில் 'உபத்திரஷ்டா' என்று சொல்லியிருக்கிறது. இதற்கு மிகவும் பக்கத்தில் நின்றுகொண்டு அனுதாபத்துடன் கவனிப்பவர் என்று அர்த்தம். நோக்கில் ஆதரவும் அனுதாபமும் இல்லாவிட்டால் ஒருவரால் எதுவும் எழுதமுடியாது. புலன்களின் வழியில், மனம்போனவாறு போய்க்கொண்டிருப்பவர் வாழ்க்கையில் அகடவிகட சாமர்த்தியங்கள் எவ்வளவோ செய்யலாம். நெப்போலியனைப் போல் வீரப்பராக்கிரமங்கள் புரியலாம். ஆனால் அவரால் கவிஞராக எழுத்தாளராக ஆகமுடியாது. எழுத்தாளர் ஆகமுடியாதென்றால் அவரால் எழுதவே முடியாது என்று அர்த்தமல்ல. அவர் எழுதுவது என்றும் அழியாத அமர இலக்கியமாய், எல்லாநாடுகளிலும் எல்லாக் காலங்களிலும் வழங்குவதாய் இருக்க முடியாது, போர்முனையில் சேனாதிபதிகள் விடுக்கும் Order for the day எனப்படும் அன்றாட உத்தரவுகள் போல் அவர்கள் ஏதோ எழுதினாலும் அதன் ஆயுள் அன்றோடு முடிந்துபோகும்; செய்தித்தாள்களைப்போல் அவற்றை மறுநாள்கூட எவரும் படிக்க மாட்டார்கள்.

#### காலம் வேறு சக்தியளிக்கிறது

ஆனால் சங்கரதேவர் நூல்களை அவர் இருந்து எழுதி இப்பொழுது 400 ஆண்டுகளாகியிருந்தும் இன்னும் எல்லோரும் படிக்கிறார்கள்; இவர் 4000 ஆண்டுகளுக்கு முன் தோன்றியிருந்தால் இப்போது இன்னும் அதிக சிரத்தையாகப் படிப்பார்கள். ஏனெனில் இம்மாதிரியான நூல்கள் காலம் செல்லச் செல்ல அதிக சக்தியும், வீரியமும் பெற்றுவிடுகின்றன. இதற்குக் காரணம் இவை பலரால் பலமுறை படித்து ஆராயப்படுவதுதான். இதனாலேயே புராதன நூல்களெல்லாம் படிப்பவர்களை உலுக்கி உருக்கிவிடுகின்றன; சொக்கிப்போகுமாறு செய்துவிடுகின்றன. இவற்றின் இந்த ஆற்றல் நாளுக்குநாள் பெருகிக்கொண்டு போகிறதே தவிர சிறிதும் குறைவதில்லை. இதனாலேயே எழுத்தாளர்கள் கவிஞர்கள் சமுகத்தின் விருப்பு, வெறுப்புக்களிலிருந்து விலகி, அதன் குறைகளுக்கு ஆட்படாமல் ஆனால் சமுகத்தின் நடப்புக்களை அனுதாபத்துடன் கவனித்துப் பார்த்துக்கொண்டு இருந்துவரவேண்டும்.

#### எழுத்தாளரிடம் கோருவது

எழுத்தாளர்களாகிய உங்களிடம் பூமிதான மெதுவும் கோரவில்லை. நான் இலக்கியங்கள் படித்திருக்கிறேன், ஆனால் நான் ஓர் எழுத்தாளனல்ல. பல மொழிகளிலுள்ள இலக்கியங்களையும் படிக்கும் பேரதிர்ஷ்டம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. இதனால் சமுகத்தில் கிடந்து உழலாது, கரையில் நின்றுகொண்டு நடப்புக்களை அனுதாபத்துடன் கவனித்து வருகிறவரால்தான் சிறந்த நூல்கள் இயற்றமுடியுமென்று எனக்குத் தெரியும். எனவே பூதான வேலையில் ஈடுபட்டு உழைக்கும் ஒருவரால் தாம் செய்பவை, தாமும் பிறரும் செய்யவேண்டியவை பற்றி சிறந்த கட்டுரைகள் எழுதமுடியுமாயினும் இவ்வியக்கத்தின் ரகசியம் மர்மம் இதில் ஈடுபடாது வெளியே இருப்பவருக்குத் தெரிவதுபோல் அவ

(5ம் பக்கம் பார்க்க)

இரத்தினக் கம்பளம்

## வானொலியில் நாவலர்

பதுமன்

நாவலர் தமிழைப்பற்றி நான் இங்கு ஒன்றும் புதுமையாகக் கூறவரவில்லை. தமிழ் வசன நடையின் தந்தையெனப்போற்றப்படும் நாவலர் குழந்தைகள் படித்து விளங்கிக் கொள்ளும் முறையில் தமிழ் நடையைக் கையாண்டார். இவற்றை எல்லாம் சென்ற செவ்வாய்க்கிழமை சென்னை வானொலி தமிழ் உலகுக்கு நினைவூட்டி வைத்தது.

அன்று சென்னை வானொலியில் நடைபெற்ற **ஒலி ஏடு** என்ற இலக்கிய நிகழ்ச்சியைத்தான் குறிப்பிடுகின்றேன். சென்னை வானொலிப் பேச்சுப் பகுதியின் தலைவரான தமிழ்ச் செல்வர் திரு. மீ. ப. சோமசுந்தரம் இந்த இனிய இலக்கிய நிகழ்ச்சியை தொகுத்தளித்திருந்தார். ஆறுமுகநாவலரின் நூலிலிருந்து சில பகுதிகளை வானொலி வாயிலாக வாசித்த முறை மிகச் சிறப்பாக இருந்தது. நாவலர் ஒரு கண்டனப் புலி என்பதும் தமிழ் அறிஞர்கள் அறிந்த தொன்று. அவருடைய கண்டனத்திலும் ஒரு சிறு பகுதியைச் சேர்த்திருக்கலாமேயென இந் நிகழ்ச்சியைக் கேட்ட அன்பர் ஒருவர் குறிப்பிட்டார், எனினும் அன்றைய "ஒலி ஏடு" மிக நல்ல முறையில் அமைந்திருந்ததெனப் பலரும் பாராட்டினர். நாவலர் வாழ்க!

### அருளம்பலவனார்

நாவலர் தமிழைப் பற்றிப் பேசும்போது இலங்கை சாகித்திய மண்டலத்தாரின் பரிசைப் பெற்ற பண்டிதர் சு. அருளம்பலவனாரின் தமிழ்ப் பணியைப் பற்றிக் குறிப்பிடாதிருக்க முடியவில்லை. காரைநகரைச் சேர்ந்த பண்டிதர் அருளம்பலவனார் இப்போது ஊர்காவற்றுறை அரசினர் பாடசாலைத் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றி வருகின்றார். இவர் சில ஆண்டுகளுக்கு முன்னர் திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை எனும் சங்கநூல்களுக்கு அரிய ஆராய்ச்சியுரை எழுதி வெளியிட்டவர். திருவாசகத்தேனை அனுபவித்து வரும் பண்டிதர் அதற்கும் ஓர் ஆராய்ச்சியுரை எழுதிக்கொண்டிருக்கின்றார் என அறிகின்றேன்.

பண்டிதர் ஓர் எழுத்தாளரும் கூட. இலங்கையிலும் இந்தியாவிலுமுள்ள அநேக இலக்கியப் பத்திரிகைகள் அவருடைய கட்டுரைகளை அவ்வப்போது வெளியிடுவதுண்டு. அநேகமாக ஆராய்ச்சிக் கட்டுரைகளையே நல்ல முறையில் எழுதி வருகின்றார். இலங்கை வானொலியிலும் பண்டிதர் இலக்கியம், சமயம் சம்பந்தமான பேச்சுக்களை நிகழ்த்தியுள்ளார்.

இனிய சுபாவமும் தமிழ்ப் பண்பும் மிக்க பண்டிதர் குழந்தை உள்ளம் படைத்தவர். இப்பெரியாரின் **பதிற்றுப் பத்து** ஆராய்ச்சி உரைக்கு இலங்கை சாகித்திய மண்டலத்தார் பரிசு அளித்திருப்பது மிகவும் பொருத்தமானதே.

### பிக்கு கவலை

இந் நாட்களில் இலக்கியம் என்ற பேரில் கீழ்த்தர நூல்கள் வெளியாகி வருகின்றனவென்றும், இலங்கைப் பல்கலைக் கழகத்தில் இத்தகைய நூல்கள் பரப்பப்படுவது விரும்பத் தக்கதல்லவென்றும் மகாரகம கூட்டத்தில் பிக்கு ஒருவர் கவலையுடன் பேசியிருக்கின்றார். இதுமுற்றிலும்உண்மையே ஆனால்ஆபாச நூல்களைப் பற்றி இப்படி நாம் கூறைகூறுவதினாலும், கவலைப்படுவதினாலும் நிலைமை சீரடையப் போவதில்லை. ஒரு சமயம் இந்திராகாந்தி சினிமாப் பற்றிப் பேசுகையில், "இந்தப் படத்தைப் பார்க்காதீர்கள் என்று கூறுவதை விட, இதை எல்லோரும் போய்ப் பாருங்கள் என்று சொல்லத்தக்க வகையில் சினிமாப்படங்கள் அமையவேண்டும்" என யோசனை கூறியிருந்தார். இதேபோலத்தான் நோய் பரவுகின்றதே என்று பதறுவதைக் காட்டிலும் அந்த நோய்க்கு மருந்து கண்டுபிடிப்பதில் கவனம்செலுத்துவதே பெரிதும் விரும்பத் தக்கது.

இளைஞர்களின் உள்ளங்களை எல்லாம் கவரக்கூடிய வகையில் நல்ல நூல்களை அழகானமுறையில் மலிவான விலையில் வெளியிட அறிஞர்களும் பதிப்பகங்களும் முயற்சி செய்யவேண்டும். இப்படிச் செய்வதினால் நல்ல நூல்கள் உலகிற் பரவவகை செய்வதாகும்.

## ஐயாறன் எழுதுவது

யாழ்ப்பாணம் வேகமாக வளர்ந்து வருகிறது. தனிப்பட்டவர் பலர் சிறிய கைத்தொழிற்சாலைகளை புதிதாக அமைத்து நடத்துகின்றனர். மூலைக்குமூலை பெண்கள் சிறிய கைவேலைகளைக்கற்று, அழகான பல பொருள்கள் செய்கின்றனர்.

நேற்று சில அன்பர்கள் இங்கு இவ்வித சிறிய குடிசைத் தொழில்கள் நடக்கும் சில இடங்களுக்கு அழைத்துச் சென்று அன்புடன் காட்டினர். ஓரிடத்தில் சில பெண்கள், துணிகளில் பூ வேலைகளைச் செய்யப்பழகுவதுடன், தையல் கலையையும் கற்று வருகிறார்கள். ஒருவருடம் பயின்றால் தாங்களே சட்டை, கவுண் முதலியவற்றைத் தைக்கப்பழகிவிடலாமென்றும் கூறி, அவர்களது பல கைவேலைகளையும் காட்டினர். ஒரு கைவேலை தெரிந்தால் பெண்கள் கவலையின்றி தைரியமாக ஜீவனம் நடத்தமுடியுமல்லவா?

* * *

ஓரிடத்தில் ஒரு பெண்மணி அரிசியை உரலில் இடித்துக் கொண்டிருந்தார். ஒருகொத்து இடிக்க 20 சதமாம். ஒரு நாளைக்கு 10 கொத்து இடிக்கலாமென்றும் இரண்டு ரூபாய் சம்பாதிக்கலாமென்றும் தெரிவித்தார்.

மெஷின்கள் வந்துவிட்ட இக்காலத்தில் இப்படி நாள் பூராவும் ஒருதாய் சிரமப்பட்டு இடித்துப்பிழைக்க வேண்டியிருக்கிறதே என்று நினைத்தேன். ஆனால் ஒருவர் மெஷின் வைத்து இந்த வேலையைச் செய்து விடுவதாயின், இவர்களுக்குப் பிழைப்பேது? வேலையில்லாக்கஷ்டம் இன்னும் அதிகரிப்பதாகவே இருக்கும்.

அதனால் தான் மகாத்மாவும் அதிக மெஷின்கள் கூடாதென்றும், கிராமமக்களின் பிழைப்பைக் கெடுக்கக்கூடாதென்றும் கூறி, நூல்நூற்கும் கைராட்டினத்தைப் புகுத்தினார். நூல் நூற்கும் பெரிய ஆலைகள் இருந்தும், கையால் நூல் நூற்று பல லட்சக்கணக்கான பெண்மணிகள் பாரத நாட்டிலே நாளுக்கு ஒரு ரூபாய்க்கு மேல் சம்பாதிக்கிறார்கள்.

இந்திய அரசாங்கம் 'அம்பர் சர்க்கா' செய்து கிராமமக்களுக்கு அளிக்க 2 கோடி ரூபாய் மான்யமளித்துள்ளது. அதேபோல், அம்பர் சர்க்காக்களை இங்கு இலங்கையில் வரவழைத்து கதர் உற்பத்தியைப் பெருக்கினால், பலருக்கு பிழைப்புக் கிடைக்கும். பொழுதையும் பொன்னாக்கலாம். காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா, முன்னர் கைராட்டையில் நூற்று, கதர்கட்டிவந்தாரென்று அறிகிறேன். அரசாங்கம் இங்கு கதர் தொழிலை ஆதரிப்பதன் மூலம் பல மக்களுக்கு பிழைப்பு கிடைக்கவழி செய்யலாம். அரசாங்கம் செய்ய முன்வரத்தயங்கினாலும், தனிப்பட்ட ஸ்தாபனங்கள் முன்வந்து இந்தத் தேசிய கைங்கரியத்தை சுணங்காமல் செய்யவேண்டும்.

* * *

வேறு சில இடங்களிலே பெண்கள் சிற்பிகளால் அழகான பொம்மைகளைச் செய்வதையும் வேறு உணவுப் பொருட்களைச் சரிக்கட்டுவதையும் கண்டேன். வெளிநாட்டு மோகத்தைவிட்டு, நமது நாட்டில் நமது பெண்கள் செய்யும் இவ்வித கைவேலைகளை நாம் ஆதரிப்பின், அது நல்ல தேச சேவையாவதுடன், இங்கு வேலையில்லாக் கஷ்டங்கள் குறையவும் பலருக்குப் பிழைப்புக் கிடைக்கவும்கூடும்.

* * *

(5-ம் பக்கம் பார்க்க)

# "காந்தியை மகாத்மாவாக்கிய இரு நாடகங்கள்"

## மண்வெட்டி தோட்ட காந்தி ஜயந்தி கூட்டத்தில் பேச்சு

நாவலப்பிட்டி, வெள்ளி

"இது காந்தி யுகம். காந்தியடிகள் வாழ்ந்த நூற்றூண்டில் நாம் வாழ்கின்ருேம். இந்த ஒரு பெருமையைவிட நாம் காந்தியடிகளைப் போற்றவோ கொண்டாடவோ உரிமையற்றவர்களாக வாழ்கின்ருேம். காந்தி போதித்த உண்மைகளைக் கடைப்பிடித்து நடக்கமுயற்சிக்காதவரை காந்தியை வழிபடுவதால் ஒடு பயனும் இல்லை."

இவ்வாறு கொட்டகலை மண்வெட்டி தோட்டம் சைவ சமய அபிவிருத்திச் சபையின் ஆதரவில் நடந்த காந்தி ஜயந்தி விழாவில் பேசும்போது ஆத்ம ஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் பேசுகையில் "எம்மைப் போல் குறையுள்ள மனிதராக வாழ்ந்த காந்தியை மகாத்மா காந்தி ஆக்கியவை அவர் பார்த்த அரிச்சந்திர நாடகம், பிரகலாதன் நாடகம் ஆகிய இரண்டுமேயாகும். தினந்தோறும் சினிமாப் படங்களையும் நாடகங்களையும் பார்ப்பதனுல் நாம் எந்த முன்னேற்றத்தையும் அடையக் காணேம். ஆனல் காந்தி பார்த்த அந்த இரண்டே நாடகங்களை மனதில் கொண்டு குலையா உறுதியுடன் உண்மைக்கு அரிச்சந்திரனுகவும், பக்திக்குப் பிரகலாதனுகவும் வாழ்ந்தார்.

குறைகளோடு பிறந்த காந்தி முயன்று முயன்று குறைகளைப் போக்கிக் கொண்டார். உண்மைக்காக உயிர் வாழ்ந்தார். இன்னு செய்யாமை (அகிம்சை) என்னும் அறத்தை மூச்சாகக் கொண்டார். பிரார்த்தனையினுல் குறைகளைப் போக்கித் தூய வாழ்வு வாழ முடியும் என்று வாழ்ந்து காட்டினுர். நாமும் முயற்சிசெய்தால் காந்திபோல் ஆகமுடியும். ஆனல் புகைத்தலுக்கும், குடிவகைகளுக்கும், வீண் செலவுகளுக்கும் அடிமைப் பட்டு வாழும் நிலை மாற வேண்டும். மகாத்மா காந்தியின் சரித்திரத்தை ஒவ்வொருவரும் படித்து அறிந்து ஒழுக வேண்டும். ஒழுக்கம் உள்ளவர்களாக ஆண்டவனின் அடியார்களாக வாழ்வைத் திருத்தி அமைத்து வாழ்தல் வேண்டும். போதனைகளின் மூலம் மகாத்மா காந்தி அகில உலகு எங்கும் வாழ்ந்து கொண்டிருக்கிருர்."

---

## டெமேரியா தோட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேலீட்டால் துரை ஒப்புக்கொண்டு வேலை கொடுப்பதாக வாக்களித்தார்.

தோட்டத் தொழிலாளர் லயன்களுக்குத் தண்ணீர் வசதி இல்லாக் குறையை நீக்கத் தோட்டத் துரை ஒப்புக்கொண்டு குழாய் போட்டுக்கொடுப்பதாகக் கூறினுர்.

தொழிலாளர் நபர் ஒருவருக்கு முக்கால் ராத்தல் தேயிலை கொடுத்து வந்ததை ஒரு ஒரு ராத்தலாக உயர்த்திப் பணம் பெறும்படி தோட்டத் துரையிடம் கேட்கப்பட்டதில் துரை அதற்கிணங்க மறுத்துவிட்டார்.

---

## ஜயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினமும் மதுரையிலே பாரதப் பிரதமர் நேரு செய்த பிரசங்கங்களை, ஆகாசவாணி ஒலிபரப்பியதைக் கேட்டேன். 73 வயதான நேரு, கணீரென்று வாலிபர் போல் உற்சாகத்துடன் பேசி பலபல ஆணிமுத்துக்களான கருத்துக்களை உகுத்தார். ஒப்பற்ற உலகத் தலைவர் நேரு பேசுவதைத் கேட்கக் கேட்க புது உற்சாகமும் நம்பிக்கையும் ஏற்படுவதாயும், கேட்போரையும் வாலிபராக்குவதாகவும் உணர்ந்தேன்.

---

## விரைவில் திரும்புமாறு பிரதமர் அறிவிப்பு

கொழும்பு, வெள்ளி

வெளிநாடு சென்றுள்ள நிதி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இம்மாதம் 8-ந் திகதி இலங்கை திரும்புவாரெனத் தெரிகிறது.

காமன்வெல்த் பார்லிமெண்டரி மகாநாட்டில் பங்கு பற்றச் சென்றிருந்த ஸ்தலஸ்தாபன வீடமைப்பு மந்திரி திரு. மகாநாம சமரவீராவை விரைவில் இலங்கைதிரும்புமாறு பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கேட்டுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

திரு. சமரவீரா லண்டனிலிருந்து திரும்புகையில் ஐக்கிய அரபுக் குடியரசுக்கு செல்வதென முன்னர் ஏற்பாடாகியிருந்தது ஆனல் தற்பொழுது அங்கு செல்லாது நேராக இலங்கை திரும்புவார் எனத் தெரிகிறது.

---

## அத்தியாவசிய பொருள்களுக்கு குதங்கள்

கொழும்பு, வெள்ளி

அத்தியாவசிய உணவுப் பொருள்களை சேமித்து வைப்பதற்காக தீவு முழுவதும் குதங்களைக் கட்டுவதற்கு 1 கோடி 60 லட்சம் ரூபாய் ஒதுக்குவதென வர்த்தக போக்குவரத்து அமைச்சு ஆலோசனை செய்துள்ளது.

இக்கட்டட வேலைகளைச்செய்யும் ஸ்தாபனங்களிடம் ஒப்புவிப்பதென முன்னர் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஆனல் பின்னர் தனிப்பட்ட கண்ட்ருக்டர்கள் தம்மிடம் இந்தக் கட்டட வேலைகளைப் பொறுப்பிக்குமாறு வர்த்தக போக்குவரத்து அமைச்சிடம் கேட்டுக் கொண்டதன் பேரில் அமைச்சு இவர்களிடம் கட்டட வேலையை ஒப்படைத்துள்ளது.

இந்தக் கட்டட வேலைகளை 8 மாதங்களுக்குள் முடித்துவிடுமாறும் அடுத்த வருடம் மார்ச் மாதத்தில் சகல வேலைகளும் பூர்த்தியாக வேண்டுமெனவும் பிரதம மந்திரி அமைச்சிடம் அறிவித்துள்ளார்.

தேயிலை, ரப்பர் கட்டுப்பாட்டதிகாரி திரு. பி. மகாதேவாவிடம் இப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

---

## விருப்பு வெறுப்பு....

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

ருக்குத் தெரியாது. இவ்வாறு வெளியே நின்று, ஆனல் இயக்கத்தில் நடப்பவைகளை அனுதாபத்துடன் கவனித்து தம் கருத்துக்களை நீங்கள் வெளியிடவேண்டுமென்பது என் விருப்பம்.

### சர்வோதயமும் கம்யூனிசமும்

இன்று உலகத்தில் வழங்கும் கருத்துக்களுள், தத்துவங்களும் சர்வோதயமென்பது ஆற்றல் வாய்ந்த உயிருள்ள தத்துவம். இதற்கு எதிராக கம்யூனிச தத்துவம் நிற்கிறது. கடந்த நூறு ஆண்டுகளாக கம்யூனிச தத்துவம் உலகில் பரவிக்கொண்டு வருகிறது. இவை இரண்டும் ஒன்றையொன்று எதிர்நோக்கி நிற்கின்றன. ஒருவகையில் இவை ஒன்றுக்கொன்று உறவுள்ளவை. இன்னெரு வகையிலோ இரண்டிற்கும் ஆகாது. இவை இரண்டும் மாற்றுந் தாய்களின் பிள்ளைகள் போன்றவை. மாற்றுந் தாயின் பிள்ளைகள் ஒரு வகையில் சகோதரர்களானல், இன்னெரு வகையில் பரம சத்துருக்களாகவும் இருப்பார்கள். ஒருகணவன்; அவனுக்கு இரண்டு மனைவிகள். அவ்விரு மனைவிகளுக்கும் பிறக்கும் இரு பிள்ளைகள் சகோதரர்கள்தானே? அவர்களில் தாய் வெவ்வேருயினும் தந்தையொருவரேயாகையால் அவர்களிடையே நெருங்கிய உறவுஇருக்கவேண்டும். ஆனல் அன்புறவு போய் பெரும்பாலும் விரோதமே இருப்பதைப் பார்க்கிருேம். சர்வோதயமும், கம்யூனிசமும் மாற்றுந் தாய்களின் பிள்ளைகள் போன்ற தத்துவங்கள். அவை இரண்டிற்கும் காரணமாய் இருப்பது அன்பு, கருணையென்ற ஒன்றே. ஆனல் கம்யூனிசம் மக்களின் துன்பத்தைகண்டு தாளாத நிலையில் தோன்றியிருக்க, சர்வோதயமோ இயல்பாகத் தோன்றியிருக்கிறது. முதலாளிகள் சமுகம் செய்த கொடுமைகளைக்கண்டு பொருமல் அதற்குப் பிரதி செய்யும் நோக்குடன் தோன்றியது கம்யூனிசம். இதனுல் அது ஒரு சார்பானதாய் இருந்துவருகிறது. இதனுல் அது சமுகத்தின் ஒரு பகுதியை மட்டும் கவர்ந்துள்ளது. சர்வோதயத்தில் இவ்வாறு பிரதி செய்யும், பழிவாங்கும் நோக்கமெதுவும் இல்லாதமையால் அது உண்மையாற்றல் பெற்றதாயிருக்கிறது. ஆனல் சர்வோதயம் மெல்ல மெல்லத் தான் பரவும், வளரும். அது பரவ காலம் அதிகமானுலும் அது தான் நிலைக்கும், நீடித்து நிற்கும். கம்யூனிசம் வெகு வேகமாய் வந்தபோதிலும்அது ஆற்று வெள்ளம்போல் இன்று பெருகுவதும், நாளை வடிவதுமாகவே இருந்துவரும். ருஷ்யாவில் இன்று இதுவே நடப்பதைப் பார்க்கின்ருேம். மார்க்ஸ் ஒன்றைச் சொன்னுர், பிறகு லெனின் அதையே சிறிது மாற்றியும், புதுப்பித்தும் வெளியிட்டார்; அதன் பிறகு வந்த ஸ்டாலினே இவர் இருவரும் செரில்லியவைகளை விட்டு, இன்னென்றைச் சொன்னுர். இன்று வந்துள்ள குருஷோவோ ஸ்டாலின் சொன்னதை தலைகீழாக மாற்றியிருப்பதைப் பார்க்கிருேம். கம்யூனிசத் தத்துவத்தில் இவ்வாறுதான் நடக்கும்.

உலகத்தில் சர்வோதயம் தான் நிலைக்கும் என்பது என் நம்பிக்கை. ஆனல் அதுவும் பேச்சளவோடு நின்றுகொண்டு காரியம் எதுவும் செய்யாதிருந்தால் நிலைக்காது. கீதையில், 'நான் சூரியனுக்கு யோகம் போதித்தேன். ஆனல் அது வெகு காலமாக வழங்காதுபோய் விட்டமையால் அதை உனக்கு மீண்டும் போதிக்கிறேன்' னென்று கிருஷ்ணபகவான் அர்ஜுனனிடம் சொல்லுகிருர். (அத்தியாயம் 4 சுலோகங்கள் 1—2)

இவ்வாறு ஆனது ஏன்? ஏனென்ருல்பகவான் போதித்தவைகளை நடத்திக் காட்ட எவரும் இல்லாது போய் விட்டது. ஆயினும் தத்துவத்திற்கு, உண்மைக்கு அழிவு கிடையாது. அது என்றென்றும் இருந்து வரும். அதன்படி நடந்தால் அதன் விளைவை நாம் கண்ணல் பார்க்க முடியும். காரியம் எதுவும் செய்யாத பொழுது அது கருத்துருவில் காற்ருேடு காற்ருய் இருந்துவரும். இதனுலேயே நான் சர்வோதயவாதியாக (சர்வோதயம் பற்றிப் பேசுபவனுக) மட்டும் இராது, சர்வோதய காரியாக (சர்வோதயத்திற்குச் செயலுரு அளிக்க) விரும்புகிறேன்.

---

# மதுரை மீனுட்சி அம்மன் கோயில் திருமுறை அர்ச்சனை திட்டம்

## முதலியார் சின்னத்தம்பி பாராட்டுச் செய்தி

யாழ்ப்பாணம், வெள்ளி

வடமொழியில் மட்டுமே ஆலயங்களில் பூசை வழிபாடுகள் நடந்து வந்ததை எதிர்த்துச் சில ஆண்டுகளாகத் தமிழகத்தில் ஒரு கிளர்ச்சி நடந்து வந்தது. தமிழில் அர்ச்சனையாகுதல் நடத்தல் வேண்டும். அல்லது வடமொழிச் சுலோகங்களுக்குப் பதிலாக நாயன்மார் ஆழ்வாராகிய அனுபூதிச் செல்வர்கள் அளித்துள்ள தமிழ் மந்திரங்களாகிய திவ்யப் பாடல்கள் பூசைகளில் இடம் பெறல் வேண்டும் என்ற கோரிக்கை வலிமை பெற்று வந்தது. அண்மையிலே இந்த இயக்கம் குன்றக்குடி அடிகளாருடைய அருள் நெறிப் பிரசாரத்தின் விளைவாகத் தமிழகத்தில் தீவிர நிலை எய்தியது. இந்த இயக்கத்தின் வேகத்தையும் சைவ உலகத்தின் விழிப்புணர்ச்சியையும் அறிந்த சென்னை அரசாங்கம், தமிழர்ச்சனைக் கோரிக்கை நியாயமானதென ஒத்துக்கொண்டது. ஆலயங்களில் தமிழர்ச்சனை நடைபெறுவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்யுமாறு ஆலய பரிபாலனத்துறைஅமைச்சருக்கு அதிகாரம் அளித்தது. மந்திரி திரு. பக்தவத்சலம் இதற்குவேண்டிய திட்டத்தை வகுத்து அடிகளாருடைய அனுசரணையோடு 4-10-61இல் தமிழ் வளர்த்த மதுரை மீனுட்சி அம்மன் கோவில் திருமுறை அர்ச்சனைத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இந்த வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பெற்ற, ஈழத்து சைவ சித்தாந்த திருப்பணிக் கழகத் தலைவரும், அருள்நெறி மன்றத் தலைவருமாகிய முதலியார் சின்னத்தம்பி பின்வரும் பாராட்டுச் செய்தியை தவத் திரு அடிகளார்க்குத் தந்தி வாயிலாக அனுப்பியுள்ளார்.

"தங்கள் அயரா உழைப்பினுலும் ஆர்வம் மிக்க அருள்நெறி இயக்கத்தாலும், தமிழ் அனுபூதிச் செல்வர்கள் அளித்துள்ள திவ்வியத் திருமுறைப் பாடல்கள் தங்கள் பழைமைய தெய்வீகமாண்பைப்பெற்றுவிட்டன.

"தங்களோடு தங்களின் மாபெரும் வெற்றியில் மகிழ்ச்சியில் திளைக்க ஆசைப்படுகின்ருேம். தமிழ்நாட்டில் ஆலய வழிபாட்டுச் சீர்திருத்தத்தில் உச்சமான இந்த வெற்றியால் சமயத் துறையில் ஒப்பற்ற மறுமலர்ச்சி உண்டாகும் என்பதே எமது நம்பிக்கை."

"இந்தப் புனிதமான தமிழ்த் தொண்டிற்குத் தங்களுக்கு ஆதரவளித்து ஒத்துழைத்த மந்திரியார் பக்தவத்சலத்துக்கு எங்கள் உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்ருேம்."

"உள்ளத்தையும் உயிரையும் உருக்கும் திருமுறைப் பாடல்கள் போல் தமிழன் உள்ளத்தை உருக்கவேறு எந்தப் பாடல்களுக்கும், மந்திரங்களுக்கும் ஆற்றல் இல்லை. இந்தப் பாடல்கள் இடம் பெருத எந்தப் பூசையும் வழிபாடும், சைவருக்கேனும் வைணவருக்கேனும் பயனுடையதாகவும் நிறைவுடையதாகவும் இருக்க இயலாது ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரியும் இப்பாடல்கள் இல்லாதவழிபாடும் வழிபாடா?"

"தமிழன்னையைச் சிறைமீட்ட பெருமை தங்களுக்குரியது. ஞானசம்பந்தருடைய வீரஉணர்ச்சிச் சாயலைத் தங்களிடத்தில் காண்கின்ருேம். அமைதி நிலை கூடுவதற்குச் சாதனமாதற்கும். சிவானுபவத்தைவெளியிடுதற்கும் தமிழ்மொழி ஆற்றல் வாய்ந்தது என்பதை நமது நாயன்மார்கள் ஸ்தாபித்துச் சென்ற வழியில் தாங்கள் அருள்நெறியாம் திருமுறை நெறி வளர்க்க முற்பட்டிருக்கும் தவத்திற்கு எங்கள்நன்றி.

குன்றக்குடி முருகன் தங்களுக்குப் பூரணவாழ்வும் பொலிவான ஆற்றலும் அளித்து நமது தெய்வத் தமிழிற்கும் அருள்நெறிக்கும் தொண்டு செய்யக் காப்பாற்றி அருளுவாருக.

---

## பலநோக்குசங்கத்தில் பிரபுத்வ மனப்பான்மை

சங்கானை, வெள்ளி

1961-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 23-ம்திகதி சனிக்கிழமை நடைபெற்ற சங்கானைப் பட்டின சபையின் தீர்மானம்.

"பிற்போக்குச் சாயையுள்ள முதலாளித்துவ தாக்குதலுக்கு எதிராக இந்நாட்டில் கூட்டுறவு இயக்கம் வளர்வதென்பது துர்லபம். குறிப்பாகப் பிரபுத்துவப் பிற்போக்கு எண்ணங்கள் மலிந்த யாழ்ப்பாணக் குடாநாட்டில் இவ்வியக்கம் வளர்வதுபோல் தோற்றமளிப்பினும், இது உண்மையாகப் பயன்பட வேண்டியவர்களுக்கு பயன்படாமல் ஒரு குறிப்பிட்ட செல்வந்தர்களுக்கும் அவர்களின் கையாட்களுக்குமே பயன் பட்டுவருகிறது. இக்காரணத்தினுல் இயக்கம்நஷ்டப்படாமல் இருப்பினும் ஓர் அளவுக்கு அதிகாரிகளின் கண்ணுக்கு வளர்ந்து பயன் தரும் இயக்கம் போலும் தோன்றலாம். ஆனல் அது உண்மை நிலையல்ல. உதாரணமாக ஒருசில பலநோக்குச்சங்க நிர்வாகிகளைத் தவிர்ந்த ஏனையோர் எல்லாம் பிரபுத்துவ மனப்பான்மையடைந்த பிற்போக்குவாதிகளே. இது யாழ்ப்பாணக்குடாநாட்டில் வளர்ந்துள்ள பிற்போக்கு இயக்கத்தைக் குறிக்கிறது. ஆகவே அரசாங்கம், உண்மையில் ஏழைமக்கள், கமக்காரர் மீது அனுதாபமிருப்பின், அவர்களுக்கு நன்மையளிக்கக்கூடிய வகையில் விவசாயப் பொருட்களில் கொள்முதல், விற்பனவு, பலநோக்குச் சங்கங்களிடமிருந்து நேரடியாகவாங்கி கொழும்பு மார்க்கட் போன்ற இடங்களுக்கு ஏற்றுமதிசெய்தல் போன்ற முழுப்பொறுப்பையும் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனமே பொறுப்பேற்க வேண்டுமெனவும், யாழ்ப்பாணத்தில் என். டி. ஏ. பி. யூனியன்கள், கோவிற்பற்று யூனியன்கள் போன்ற ஸ்தாபனங்களை கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் உடனே பொறுப்பேற்று இயக்கத்தை விரிவுபடுத்தி ஒவ்வொரு கிராமவாசியும் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனங்களில் தமது தேவைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் செயலாற்ற வேண்டுமென்று இச்சபை கேட்டுக்கொள்ளுகிறது.

றேடியோ சிலோனில் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தில் சாமான்களை வாங்குங்கள் என்ற பிரசாரம் காது புளிக்கிறது. ஆனல் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் எங்கிருக்கிறதென்று கிராமவாசிக்குத் தெரியவில்லை. இந்த நிலை மாருவிட்டால் கூட்டுறவு இயக்கம் ஒதுபோதும் பயன் தரமாட்டாது,வளர்ச்சியுருது."

மேற்படி தீர்மானம் 4-ம் வட்டார அங்கத்தவர் திரு. வ. நாகலிங்கத்தால் பிரேரிக்கப்பட்டு திரு. க. அம்பலவாணரால் அனுமதிக்கப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.



# மாணவர் மலர்



## பார்வை இழந்தவர்களுக்கு பேசும் நூல்கள்

கண் இழந்தவர்கள் கல்வி கற்க முடியாது என்றிருந்த நிலையை விஞ்ஞானம் இன்று மாற்றி வருகிறது. பார்வை இழந்தவர்களும் பாரில் நல் வாழ்வு வாழ விஞ்ஞானமும் நல்ல கழகங்களும் எவ்வாறு உதவுகிறது என்பதைப் பார்ப்போம்.

பிரிட்டனிலுள்ள தேசிய விழியிழந்தோர் கலைக்கழகம் சென்ற 90 ஆண்டுகளாகச் சிறந்த முறையில் பணியாற்றி வருகிறது. பார்வையிழந்த போர்வீரர்களுக்குப் பணியாற்றும் செயின்ட்ஸ்டன் சங்கத்துடன் சேர்ந்து பல்வேறு நூல்களை இசைத் தட்டுக்களில் பதிப்பித்து விழியிழந்தோருக்கு வழங்கியிருக்கிறது. இந்த வசதியை அனைவரும் பயன் படுத்த முடியாது. செலவும் அதிகம். எனவே எளிய முறையில் நூல்களை ஒலிப் பதிவு செய்வது பற்றிப் பார்வையிழந்தோர் நலப்பணியிலீடுபட்டுள்ள ஊழியர்கள் சிந்தித்து இசைத் தட்டுக்களுக்குப் பதிலாக ஒலி நாடங்களை உபயோகிக்க முடிவு செய்தார்கள்.

பிரிட்டனில் எழுத்துக்களை ஒலியாக்கி இசைத் தட்டில் பதிவு செய்த 700 நூல்கள் இருக்கின்றன. இந்த நூலகத்தில் சுமார் 6,500 பேர்கள் அங்கத்தவர்களாகச் சேர்ந்துள்ளார்கள்.

இந்த ஒலி நாடாமூலம் பார்வையிழந்தவர் எப்படிப் படித்துக் கொள்கிறார் என்பதை நீங்கள் அறிய ஆவலாக இருப்பீர்களல்லவா? இதோ இக் கட்டுரையைப் படித்துப் பாருங்கள்.

'படிக்க' விரும்பும் ஒருவர் ஒலி பெருக்கியைக் காதில் பொருத்திக்கொண்டு ஸ்விட்சைப் போடுகிறார். தேவையான அளவு ஒலியை சரிப்படுத்திக்கொள்கிறார். நாடாவின் முதல் கோட்டிலுள்ள ஒலியைக் கேட்கிறார். முதல் கோடு முடிந்ததும் எச்சரிக்கை ஒலி கேட்கிறது. இயந்திரத்தை நிறுத்திவிட்டு பின் இரண்டாவது கோடு இயங்கும் முறையில் நாடாச் சுருளை அமைக்கிறார். மீண்டும் ஒலி கேட்கிறது. இந்த ஒலி நூல்களை எப்படித் தயாரிக்கின்றார்கள் தெரியுமா?

கணீரென்று தெளிவாக உச்சரிக்கும் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவரை ஒரு நூலைப் படிக்கச் சொல்லி ஒலிப்பதிவு செய்கிறார்கள். பின் அதிவேகத்திலியங்கும் இயந்திரத்திலிட்டு பிரதிகள் எடுக்கிறார்கள். ஒரு நூலுக்கு நல்ல வரவேற்பிருந்தால் பல பிரதிகளைத் தயாரிக்கின்றார்கள்.

---

## "எதிர்காலம் விளக்கமுற சமய பக்தி அவசியம்"

யாழ்ப்பாணம், சனி

"மாணவர்கள் இளமையிலேயே சமய நெறியில் நன்கு ஒழுக வேண்டும். சமய பக்தர்களாக விளங்க வேண்டும். அப்போதுதான் அவர்களின் எதிர் காலம் பண்பாடுள்ளதாகப் பரிமளித்து விளக்கமுறும். இதன் பொருட்டுத்தான் எங்கள் சமயத் தொண்டனும் வித்தியாதிபதியுமாகிய திரு எஸ். யூ. சோமசேகரம் வடமாகாணத்தில் ஆங்காங்கு மாணவர்களின் எதிர்கால சுபிட்சம் நோக்கி இந்துமா மன்றங்கள் நிறுவ ஏற்பாடு செய்தார். அவர் செய்து வைத்த தொண்டின் பயனாக அம் மன்றங்கள் சிறந்து மாணவராகிய சமய பக்தியில் ஓங்கி வருவதைப் பார்க்கும் போது மகிழ்ச்சிடைகின்றோம்"

சேணிய தெரு ஆங்கில வித்தியாசாலை இந்து சமய மாணவர் மன்றத்தின் வருடாந்தக் கூட்டம் பாடசாலையில் நடைபெற்றபோது தலைமை வகித்துப் பேசிய மன்றத் தலைவர் செல்வன் கி. சிவராசா மேற்கண்டவாறு கூறினர். எதிரே வரும் நவராத்திரி தினத்தின் கடைசி மூன்று தினங்களையும் இசைக் கச்சேரி சமயப்பிரமாணமே என்பன வைத்து சிறப்பாக கொண்டாடுவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

புதுவருட உத்தியோகஸ்தர்களாகப்பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: பாடசாலை அதிபர் திரு. எஸ். விஜயரத்தினம்,உபபோஷகர்கள்: தலைமையாசிரியர் திரு. ஆர். நாகலிங்கம், இசைப்புலவர் திரு. செல்லத்துரை, தலைவர்: செல்வன் சி. சிவராசா, உபதலைவர்கள்: செல்வி வி. சந்திரலீலா, செல்வன் ச. மகாலிங்கம், காரியதரிசி: செல்வி ந. சீதாலட்சுமி, செல்வி. பொ. தயாளதேவி, தனாதிகாரி: செல்வி இ. இராசேஸ்வரி நிர்வாக அங்கத்தவர்கள் செல்வன் மு. துரைராசா, செல்வி அ. மல்லிகா, செல்வி ஜெகதீஸ்வரி, செல்வன் தா. மகேந்திரன், செல்வி து. கமலா தேவி.

---

## தம்பி தூங்காதே!

**ந. சு. வைத்திலிங்கம்**

தம்பி, இன்னமுமா தூங்கிக் கொண்டிருக்கிறாய். கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்திரு. சுற்று முற்றும் ஒரு தடவை என்ன நடந்துகொண்டிருக்கிறதென்பதைச் சற்றே கவனித்துப்பார்.

சந்திரனை முட்டும் அளவிற்கு உலகமும் மனித நாகரீகமும் முன்னேறிவிட்ட இந்த வேளையில், நீ மட்டும் உறங்கிக் கொண்டிருக்கிறாய்.

இங்கு வாழும் மாந்தரின் உள்ளங்களில், நாளை என்ன செய்வது அல்லது எமக்கு என்ன நடைபெறப்போகின்றதென்ற கேள்விகள் பயமுறுத்திக்கொண்டிருக்கின்றனவே! நீ தூங்கி விழிப்பதற்குள் எத்தனை அதிர்ச்சி தரக்கூடிய பல சம்'வங்கள் நடைபெற்று விட்டன என்று பார்த்தாயா?

இவற்றினை வெறுப்பது மட்டுமல்ல ஒழித்துக் கட்டவும் வேண்டும். உலகத்துப் பெரிய சிந்தனையாளர்களெல்லாம் தமது வாழ் நாள் முழுவதையும் மனித குலத்தின் நல்விடுதலைக்கான வழிகளைக் கண்டு பிடிப்பதிலேயே செலவிட்டுள்ளார்கள்.

அவர்களுடைய வரலாறு அவர்கள் செய்து சென்றுள்ள பணியாகியவற்றை அறிவ ளியாய நீ இன்னும்ஒரு தடவை நன்கு ஆய்ந்துப்பார்!

அமைதியின்மை நிரம்பியுள்ள தருணத்திலே உன்போன்ற இளைஞர்கள் சோர்ந்து இருந்து விடக் கூடாது. எதிர் காலச் சமூகத்திற்கு இருண்ட வாழ்வைக் கொடுக்கக் கூடாது. இன்றே தயங்காது நல்வழிகளில் செயலாற்ற முற்படு. நாட்டில் இருக்கக் கூடிய முற்போக்கு சக்திகள் அனைத்தையும் ஒருங்கு சேர்த்து நாட்டிற்கேற்ற நல்வாழ்வுக்கான திட்டங்கள் போட்டு சமூகத்தை முன்னேற்ற முற்படுதலில் விழிப்பாய் இரு!

தம்பி! வீணே உண்டு உடுத்து உறங்குவதில் எதுவித பிரயோசனமும் இல்லை. செய்யவேண்டியவற்றைப் பின்போடுவதும் தன்னலம் கருதி வாழ்வதும் அறியாமை என்பதை நினைவில் நிறுத்திக்கொள்!

பக்கத்து வீடு பற்றி எரியும் போது நீ சும்மாவிருப்பாயா? உனது வீடு தானும் தீப்பிடித்தெரிவதை நீ சகிப்பாயா? நீ ஓடிச் சென்று நெருப்பை அணைக்கப் பாடுபடுவாய் அல்லவா?

இன்று எமது சமூகம் முன்னேற வேண்டும். ஏனைய நாடுகளோடு எமது ஈழமும் வளமாக நிலை பெற வேண்டும். எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் இன்னாட்டு மன்னர் என்ற பாரதியின் கனவு நனவாக வேண்டும். நான் என்ற மமதை கொண்டு திரியும் நய வஞ்சகர்களை நசுக்க வேண்டும். அன்று நாட்டை விட்டு விரட்ட வேண்டும்.

போரிலே கணவர் இறந்து விட்டார் என்ற செய்தியைக் கேட்டதும் தன் அருமை ஒரு மகனையும் போருக்கு அனுப்பி வைத்தாளே அன்று அந்த வீரத் தமிழ்த் தாய்! அந்த மரபிலே பிறந்த நீ இன்று ஏன் தூங்குகிறாய்.

உன்னைப்போல் ஒவ்வொரு வாலிபனையும் உன் முன்னணியில் சேர்த்துக் கொண்டு அன்னியனின் போர்ப் படையைச் சின்னபின்னப்படுத்தி சிதறடிக்க எழுந்திரு. மீண்டும் தூங்காதே தம்பி! தூங்காதே.

---

## விவேகானந்தர் கட்டுரைப் போட்டி

கொழும்பு, வெள்ளி

கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தின்மாதசஞ்சிகையாகிய இந்து இளைஞன்,சுவாமி விவேகானந்தர் நினைவு குறித்து ஒரு கட்டுரைப் போட்டி ஒழுங்கு செய்துள்ளது. எல்லோரும் பங்குபற்றக்கூடிய இப்போட்டிக்கு பிரவேசக் கட்டணம் ஏதும் இல்லை. முறையே 50, 30, 20 ரூபாய் பெறுமதியான மூன்று பரிசுகள் வழங்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. கட்டுரை முடிவுத் திகதி ஒத்திப் போடப்பட்டுள்ளது.



தேர்தல் அதிகாரி திரு ஏ. இரத்தினதுரையின் மகனை பிரகலாதனுடைய (வயது 11) மிருதங்க அரங்கேற்றம் வட இலங்கை சங்கீதசபையின் ஆதரவில் சங்கீத வித்வான் மகாராஜபுரம் திரு. வி.சந்தானம் தலைமையில் 11—10—61 புதன்கிழமை யாழ்ப்பாண மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்- செல்வன் பிரகலாதன் சங்கீதபூஷணம் திரு. ஏ. எஸ். இராமநாதனிடம் குருசிஷ்ய முறைப்படி மிருதங்கக் கலைபயின்று நன்கு பயிற்சிபெற்றுள்ளார். வட இலங்கை சங்கீதசபை நடத்தும் மிருதங்க அரங்கேற்றம் இதுவே முதலாவதாகும். இவ்வரங்கேற்றத்தில் திரு. எஸ். பரம்தில்லைராஜனுடையகச்சேரிநடைபெறும்

---

## அறிவுச் செல்வம்

### ★ ஹிபோக்கிரேட்ஸ்

'தற்கால வைத்திய முறையின் தந்தை' என்ற கவுரவம் பெற்றவர் 'ஹிப்போகிரேட்ஸ்'. இவர் கிரேக்க நாட்டைச் சேர்ந்தவர். மூடப்பழக்க வழக்கங்கள் மலிந்த காலத்தில், நோய்களைத் தீர்க்கத் தாயத்துக்கள் கட்டும் பழக்கம் இருந்த காலத்தில் வாழ்ந்தவர். அவர் வாலிபராக இருக்கையிலேயே இத்தகைய மூடப் பழக்கத்திலிருந்து வைத்தியத்தை மீட்ட பெருமை அவரைச் சாரும். கடவுளின் கோபத்திற்கு ஆளானதுதான் நோய்க்குக் காரணம் என்று பூசாரி வைத்தியர்கள் நம்பி வந்தனர். நோய் காண்பது சாதாரண உலகக் காரணங்களினால் தான் என்று முதன் முதலில் எடுத்துரைத்தவர் ஹிப்போகிரேட்ஸ். நோய்களை மிக ஜாக்கிரதையாகக் கவனித்து அறிந்து கொள்ளுதல், நோய்களை குணப்படுத்தும் முறைகளைச் சோதித்து அறிதல், நோயின் தன்மையை முன்கூட்டியே சொல்லுதல், முதலிய வைத்திய முறைகளை அவரும் அவருடைய இளம் சகாக்களும் வகுத்தனர்.

### ★ கோபர்னிக்ஸ்

கோபர்னிக்ஸ் என்ற வான இயல் வல்லுநர் 20 வயது நிறைவதற்கு முன்னலேயே, வான இயலில் வேரூன்றியிருந்த சில கொள்கைகளையும், நம்பிக்கைகளையும் உடைத்தெறிந்தார். "பிரபஞ்சயத்தின்" மையத்தில் இருப்பது சூரியன் என்றும் பூமியல்லவென்றும் அவர் கூறினர். துணிச்சலாக இவ்வாறு கூறியதற்கு அவர் நாஸ்திகர் என்றும் அஞ்ஞானி என்றும், பேத புத்திபடைத்தவன் என்றும் தூற்றப்பட்டார். அவருடைய சகாக்களில் பலர் உயிருடன் எரிக்கப்பட்டனர். மூப்பு ஏற்பட்ட காலத்திலும் கூட கோபர்னிக்ஸ் தமது கொள்கைகளை மாற்றிக்கொள்ளவில்லை. ஆனால் அவற்றை முழுவதும் வெளியிட அஞ்சினர்; மூப்பு அவரைக் கோழையாக்கிவிட்டது.

### ★ வெஸாலியஸ்

20 வயது கூட நிரம்பாத வெஸாலியஸ் என்ற உடற்கூற்றியல் வல்லுநர் கேலன் என்பவரின் போதனைகளை துணிச்சலுடன் தூக்கி எறிந்தார். 1300 ஆண்டுகளாக கேலன் போதனைகள்தான் வேதவாக்காக இருந்து வந்தன. 23-வது வயதில் வெஸாலியன் உடற் கூற்றில் பேராசிரியரானர். மனிதனின் உடற்கூறுபற்றி அவர் ஒரு நூல் எழுதி பிரசுரித்தபோது அவருக்கு வயது 29தான். இந்த நூல் விஞ்ஞான ரீதியில் வைத்தியத்திற்கு ஊக்கமூட்டியது.


குனேகா செண்டுகள்

வாழ்க்கை மலர்ச்சியுற உலகப் புகழ்பெற்ற

குனேகா மருக்கொழுந்து உபயோகித்து ஆனந்தமடையுங்கள்

தயாரிப்பவர்கள்:

குனேகா அடையார்

மதராஸ் 20.

இலங்கை சோல் ஏஜண்டுகள்:

ஜெகஜோதி அன் கோ,

குருநெனியா.

## நாவலப்பிட்டியில் நவராத்திரி விழா

நாவலப்பிட்டி, வெள்ளி

நாவலப்பிட்டி இந்து வாலிபர் சங்கக் காரியக் கமிட்டிக் கூட்டம், சங்கத்தின் உபதலைவர் திரு. பி. எஸ். லட்சுமணன் தலைமையில் நடைபெற்றது.

நவராத்திரி விழாவை நகரின் ஒன்பது இல்லங்கள் தோறும் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. நாவலப்பிட்டிக்கு இம்மாதம் 22-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை விஜயஞ் செய்யவிருக்கும் மகரிஷி சுத்தானந்த பாரதியாருக்கு இந்து வாலிபர் சங்கத்தின் ஆதரவில் வரவேற்பு ஒன்று அளிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

## எதிரி விடுதலை

பருத்தித்துறை, வெள்ளி

உடுப்பிட்டியைச் சேர்ந்த முத்துவேலு தங்கமுத்து என்பவரது தாலிக்கொடியைத் திருடியதாக அதே ஊரைச் சேர்ந்த பொன்னையா கந்தசாமி என்பவர் மீது பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கில் குற்றம் நிரூபிக்கப்படாததால் நீதிபதி திரு. ஏ. வைத்திலிங்கம் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பு வழங்கினர்.

## எம். பி. யை எதிர்பார்த்துள்ளனர்

மன்னர், வெள்ளி

மன்னர் பாராளுமன்றப் பிரதிநிதியான திரு. வி. ஏ. அழகக்கோன் தடுப்புக்காவலிலிருந்து விடுதலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஏராளமான அனுதாபிகள் அவரது நல்வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

## பருத்தித்துறை பகுதியில் 'எக்ஸ்ரே' படப்பிடிப்பு

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறைப் பகுதியில் நடமாடும் 'எக்ஸ்ரே'ப் படப்பிடிப்பு நடைபெற ஆரம்பித்திருக்கிறது.

தற்போது பட்டின எல்லைக்குள் ஆரம்பித்துள்ள இவ்வியக்கம் ஏனைய கிராமப்பகுதிகட்கும் விஸ்தரிக்கப்படுவதுடன் வடமராட்சிப் பகுதியில் சுமார் இரண்டு மாத காலத்துக்கு சேவை செய்யுமெனவும் கூறப்படுகிறது.

## ஆசிரியர் சங்க விசேஷ கூட்டம்

வவனியா, வெள்ளி

அகில இலங்கைத் தமிழ் ஆசிரிய சங்க வவனியாக் கிளை விசேஷ பொதுக்கூட்டம் வவனியாச் சைவப்பிரகாச வித்தயாசாலையில் 4-10-61 அன்று சங்கத் தலைவர் திரு. வி. சுப்பிரமணியம் தலைமையில் கூடிற்று.

கூட்டத்துக்கு அகில இலங்கைத் தமிழ் ஆசிரிய சங்கத்தின் சார்பில் வட இலங்கைத் தமிழ் ஆசிரிய சங்கத் தலைவர் வித்துவான் திரு. கந்தசாமி, காரியதரிசி பண்டிதர் திரு. ச. பொன்னுத்துரை, தனதிகாரி திரு. குமாரசாமி ஆகியோர் விசேஷ பார்வையாளராக சமூகமளித்தனர்.

## வானெலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**சனி 7-10-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 நாகஸ்வரம், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 குழந்தைகள் சர்வதேச வாரம், 6-15 கிராம சஞ்சிகை, 6-45 கே. பாக்கியராஜா - வயலின்.

இரவு 7-15 நேயர்கடிதம், 7-30 'கமலாவதி சபாரத்தினம் - பாட்டு, 8-00 இஸ்லாமியநிகழ்ச்சி, 9-15 அறிவுச் சுழல், 9-15 லயவின்யாசம், 10-00 நேயர்விருப்பம்.

**ஞாயிறு 8-10-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரை இசை, 8-00 கிறிஸ்தவ கீதங்கள், 8-30 ஞான அஞ்சலி, 9-00 முஸ்லிம் சமயப் பாடசாலை, 9-30 கிறிஸ்தவ நிகழ்ச்சி, 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர்பகுதி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 கிரிஜா சுப்பிரமணியம் - பாட்டு, 5-15 திரைச்குரல், 6-10 குரல் வகை, 6-30 ஜலதரங்கம்.

இரவு 7-00 கே. அம்பலவாணபிள்ளை - பேச்சு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 'வீரத்தின் பரிசு' - நாடகம், 9-45 தேர்ந்தஇசை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்.)

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

**சனி 7-10-61**

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-30 ஸ்ரீவேங்கடேஸ்வர ஸுப்ரபாதம் பாடுபவர் எம். எஸ். சுப்பலட்சுமி.

பகல் 1-00 துதிப்பாடல்கள், 1-20 பிள்ளைக்கனியமுது, 1-00 குரல் இசை, 2-10 சேத்தூர் சுந்தரேசபட்டர் - வயலின்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 'வாழ்வில் தவம்' - நாடகம், 8-30 டெல்லிஅஞ்சல், 8-40 இசைமாலை, 9-30 அகில பாரத சங்கீதநிகழ்ச்சி.

**ஞாயிறு 8-10-61**

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 டி. எஸ். சுப்புலட்சுமி - புல்லாங்குழல், 8-15 என். எல். கானசரஸ்வதி - பாட்டு.

பகல் 12-00 நீங்கள்கேட்டவை, 12-30 சூரியகாந்தி, 1-00 மணிமலர், 1-50 வீணை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 எஸ். எஸ். பரமசிவம்பிள்ளை - பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-00 பாலம் ராமமூர்த்தி - பாட்டு, 8-30 டி. எஸ். சுப்புலட்சுமி - புல்லாங்குழல், 9-15 வாத்தியஇசை, 9-45 'இருட்டறையின் மன்னன்' - நாடகம்.

## தமிழாசிரியர் சங்கக் கூட்டம்

பருத்தித்துறை, வெள்ளி

வடமராட்சித் தமிழ் ஆசிரியர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் இம்மாதம் 28-ந் திகதி நடைபெற இருக்கிறது.

வருடாந்தக் கூட்டம் பற்றி முடிவு செய்யுமுகமாகக் கூடிய நிர்வாக சபை இவ்வாண்டு 3-ம், 5-ம் வகுப்புப பரீட்சைகளையும் நடாத்துவதெனவும் தீர்மானித்துள்ளது.




# "பட்டதாரிகளுக்கிடையே பாகுபாடு காட்டக்கூடாது"

## வடமராட்சி ஆசிரியர்சங்கத் தீர்மானங்கள்

யாழ்ப்பாணம், சனி

வேலைக்குப் பதிவு செய்து கொள்வதிலும் வேலைக்கமர்த்துவதிலும் பட்டதாரிகளுக்கிடையே இலங்கைப் பல்கலைக் கழகப் பட்டதாரி போன்ற பாகுபாடு எதுவும் காட்டக்கூடாதென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானமொன்று வடமராட்சி ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடமராட்சி ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கரவெட்டி திருஇருதயக் கல்லூரியில் திரு. வி. அந்தோனிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன:

பண்டிதர் வித்துவான் ஆகியோருக்கும் பட்டதாரிகள் சம்பளம் வழங்க வேண்டுமென்று கல்வி அமைச்சரைக் கேட்டுக் கொள்வது.

ஜி. சி. ஈ. பரீட்சையில் கலை மாணவர்களுக்கு 3 ஆண்டுகளும் விஞ்ஞான மாணவர்களுக்கு 4 ஆண்டுகளும் எனவிருக்கும் கட்டுப்பாட்டிலிருந்து கெட்டித்தனமான மாணவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டுமென கல்வி அமைச்சரைக் கேட்டுக் கொள்ளுவது.

தராதரம் பெற்ற ஆசிரியர்கள் பயிற்சிக் கலாசாலையில் விசேஷ பயிற்சி முடிக்குங்கால் உயர்வுப்படி அவர்களுக்குக் கொடுக்கப்படல் வேண்டும்.

வித்தியாதிபதியின் கீழ் இயங்கும் பாடசாலைகளிலிருக்கும் சில்லறை ஊழியர்களுக்கும் அரசாங்க பாடசாலைகளிலுள்ள சில்லறை ஊழியர்களுக்குக் கொடுப்பது போல் ஒரே அளவான சம்பள விகிதம் கொடுக்கப்படல் வேண்டும்.

அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்ட போதும் வித்தியாதிபதியின் கீழ் இயங்கும் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களுக்கு முன்போலவே தொடர்ந்தும் அரசியலுரிமை அளிக்கப்படல் வேண்டும்.

இலங்கைப் பல்கலைக் கழகத்தில் 'டிப்புளோமா' பயிற்சிக்கு முன்போல வருடத்துக்கு 80 பேரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று உபவேந்தரைக் கேட்டுக் கொள்வது.

பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வி. அந்தோனிப்பிள்ளை, உபதலைவர்: திரு. கே. குணரத்தினம், காரியதரிசி: திரு. வி. இராசநாயகம், தனாதிகாரி: பண்டிதர் டி. கிருஷ்ணபிள்ளை.

## இந்திரா தமிழ் கற்கிறார்

மதுரை, அக். 6

இந்திராகாந்தி அடுத்த முறை தென்னாட்டுக்கு வரும்போது தமிழர்களை ஆச்சரியப்படும் படிச் செய்வாரென்று தெரிகிறது. "சென்ற தடவை வந்தபோது தமிழ் கற்றுக் கொள்ளப் போவதாகச் சொன்னேன். சில பாடங்கள் கூட படிக்க ஆரம்பித்தேன். ஆனால் சில சம்பவங்கள் குறுக்கிட்டு விட்டன. நான் படித்த வரையில் தமிழ் பிராணிகளையும், பழங்களையும் பற்றியதாகவே இருந்தது. இங்கு உபயோகிக்கப்படும் வார்த்தைகள் வரவில்லை. தமிழில் விலையிலா அரிய இலக்கியம் ஏராளம். அதற்காக மட்டுமின்றி பல தொழில்கள் கற்பதால் மக்களுக்குப் பலவித அனுபவங்கள் உண்டாகின்றன. அதனால் தான் தமிழைக் கற்க விரும்புகிறேன்" என்று ஸ்ரீமதி இந்திரா காந்தி அ. இ. கா. க. கூட்டத்தில் கூறினார். ஸ்ரீமதி காந்தி தமிழ் லிபிகள் கற்பதைப் பற்றிய செய்தி வெளியானதையடுத்து, அவர் இதைக் குறிப்பிட்டார்.


சினிமாஸ் திரைகளில் வெகுவிரைவில் எதிர்பாருங்கள்!

எம். ஆர். ராதா, சௌகார் ஜானகி நடித்த

**உலகம் சிரிக்கிறது**

கடைசி வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)



சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
எம். ஆர். ராதா
சாவித்திரி
நடித்த

**பாவ மன்னிப்பு**

மனோஹரா (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 6-30 க்கும் இரவு 9-30 க்கும்

எஸ். எஸ். ராஜேந்திரன், சரோஜாதேவி நடித்த

**மணப்பந்தல்**

தினசரி மாலை 4-15 மணிக்கும்
சனி, ஞாயிறு காலை 10-30 மணிக்கும்

ALIAS JESS E JAMES
(ENGLISH)


## கென்னடி - தேசாய் சந்திப்பு

வாஷிங்டன், அக். 6

இந்திய நிதி மந்திரி திரு. மொரார்ஜி தேசாய், ஜனாதிபதி கென்னடியுடன் ஒரு மணிநேரம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

## ஜோதிடர் மகாநாடு

கொழும்பு, வெள்ளி

அகில இலங்கையிலுள்ள ஜோதிடர்கள் நாளை மருதானையிலுள்ள ஸ்ரீலங்கா வித்தியாசாலையில் ஒரு மகாநாட்டை நடாத்த ஏற்பாடு செய்துள்ளனர்.

## ஐ. நா. காரியதரிசி பற்றி உடன்பாடு

நியுயோர்க், அக் 6

ஐ. நா. வில் தற்காலிக நிரந்தரக் காரியதரிசி ஒருவரை நியமிப்பது சம்பந்தமாய் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே ஒரு உடன்பாடு ஏற்பட்டிருப்பதாய் ஒரு செய்தி கூறுகிறது.

## "உள் பலவீனத்தை எதிர்த்து நாடு போராடும்"

—நேரு

மதுரை, அக். 6

"உள்பலவீனத்தைஎதிர்த்து நாடு ஒரு போராட்டத்தை நடத்தவிருக்கிறது" எனப் பிரதம மந்திரி திரு. நேரு இன்று மதுரை சேவாதார தொண்டர்கள் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

## ரஷ்யா வெளியேறும்

லண்டன், அக். 6

சர்வதேச அணுசக்தி மகாநாட்டிலிருந்து வெளியேற முடிவு செய்திருப்பதாயும், மேற்குநாடுகளின் ஒத்துழைப்பின்மையே இதற்கு காரணமென்று ரஷ்யா அறிவித்தது.

## கனடாவில் தாகூரின் ஓவியங்கள்

ஒட்டாவா, அக். 6

தாகூரின் 40 ஓவியங்கள் கனடா தலைநகர் ஒட்டாவாவில் திறந்து வைக்கப்பட்டது. தாகூரின் நூற்றாண்டுதினத்தை ஒட்டி இந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

## புத்தகக் கண்காட்சி

கொழும்பு, வெள்ளி

தென்கிழக்காசிய நாடுகளிலுள்ள மக்களிடையே வாசிக்கும் வழக்கத்தை வளர்ப்பதற்காக ஐ. நா. கல்வி, சமூக கலாசாரப்பகுதி ஒரு புத்தகக் கண்காட்சியை கொழும்பில் நடத்த உத்தேசித்துள்ளது.

இந்தியா, பாகிஸ்தான், ஈரான், பர்மா, சீன ஆகிய நாடுகளிலுள்ள பிரதிநிதிகள் இந்தப் புத்தகக் கண்காட்சியைப் பார்வையிட வருவார்களெனத் தெரிகிறது.

அடுத்தமாதப் பிற்பகுதியில் ஆரம்பமாகும் இப் புத்தகக் கண்காட்சி டிசம்பர் 16-ம் திகதிவரை நடைபெறும்.

## வர்த்தக பதிவு வரி வசூலிக்க ஏற்பாடு

கொழும்பு, வெள்ளி

வர்த்தக பதிவு வரிகளை மாவட்டக் கச்சேரிகள் வர்த்தகர்களிடமிருந்து வசூல் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு நிதி மந்திரி கைத்தொழில்மந்திரியைக் கேட்டுள்ளார். வருமான வரிகளையும் கச்சேரிகளே வசூல்செய்யவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

## ரஷ்யாவின் 18-வது அணு சோதனை

பாரிஸ், அக். 6

ரஷ்யா இன்று மிகவும் சக்திவாய்ந்த 18-வது அணு ஆயுதப் பரிசோதனையை நடத்தியதாக பாரிஸில் அறிவிக்கப்பட்டது.

## உதவிமந்திரி ஜெர்மனி செல்வார்

கொழும்பு, வெள்ளி

உதவித் தொழில் மாந்திரி ஜெர்மன் ஜனநாயக குடியரசுக்கு விஜயம்செய்வார்.

## எகிப்து-இலங்கை பரிமாற்றம்

கொழும்பு, வெள்ளி

எகிப்து, இலங்கை ஆகிய இரு நாடுகளும் தமது நாட்டிலுள்ள பேராசிரியர்கள், நிபுணர்கள், டாக்டர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், சகல தொழில்களிலும் தகுதி பெற்றவர்கள் ஆகியோரைப்பரிமாறிக்கொள்ளும்.

சமீபத்தில் ஐக்கிய அரபுக் குடியரசுக்குச் சென்றிருந்த கைத்தொழில், கலாசார மந்திரி திரு மைத்திரிபால சேனநாயக்கா அங்கு சென்றிருந்த போது செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பேரிலேயே இவ்வித ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

# இன்று நடைபெறும் ஆசிரியர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம்

## கல்விச் சேவைக் கமிஷன் நியமிக்க வற்புறுத்தும்

யாழ்ப்பாணம், சனி

வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் 46-வது வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று மானிப்பாய் இந்துக்கல்லூரியில் காலை 9-30 மணிக்கு ஆரம்பமாகின்றது.

வடமாகாணத்தில் பல்வேறு பகுதி ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொள்ள விருக்கின்றனர். இச் சங்கங்களால் நிறைவேற்றப் பட்டு அனுப்பப்பட்ட தீர்மானங்கள் இதில் கொண்டுவரப் படவிருக்கின்றன

இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப் படவிருக்கின்றன :—

அரசாங்கத்தின் புதியகல்வித் திட்டத்தின்கீழ் வித்தியாதிபதியின்கீழ் உள்ள பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு 1960 ம் ஆண்டு ஜூலை 20 ம் திகதிக்கு முன் அவர்கள் அனுபவித்து வந்த அரசியல் உரிமைகள் பாடசாலைச் சொத்துக்கள் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து பாதிக்கப் படாது தொடர்ந்தும் இருக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளல்.

ஆசிரியர் ஓய்வு விஷயத்தில் வித்தியாதிபதியின் எதேச்சாதிகாரப் போக்கை இச்சங்கம் ஆட்சேபிப்பதோடு ஆசிரியர்கள் விருப்ப உரிமைக்கால ஓய்வு முறையைக் கட்டுப்படுத்த சட்டவிதிகளை உண்டாக்குமாறு கேட்டுக்கொள்ளுதல்.

சம்பள கமிஷன் அறிக்கையை உடன் அமுல் நடத்த வேண்டும் என்றும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுதல்.

இப்பொழுது பிரத்தியேகமாக விருக்கும் பாடசாலைகளில் முன்போலப் பிள்ளைகளுக்குச் சகல வசதிகளும் செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அரசாங்கம் கவனிக்கவேண்டும். முன்போல் இப்பாடசாலைகளில் சாரணர் இயக்கம் போன்ற வெளிவேலைகள் செய்யப்படுகின்றதா என்பதையும் கவனித்துக் கொள்ளல் வேண்டும் என்று கோருதல்.

ஆசியர் நியமனம், உயர்வு, வேலை கொடுத்தல், ஆசிரியர்களுக் கெதிரான ஒழுங்குநடவடிக்கைகள் ஆகியனவற்றைக் கவனிக்க கல்விச் சேவைக் கமிஷன் ஒன்றை நியமிக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளுதல்.

அரசாங்க பாடசாலைகளிலோ வித்தியாதிபதியின் நிர்வாகத்தின்கீழ் உள்ள பாடசாலைகளிலோ ஒருவருடம் தற்காலிக ஆசிரியர்களாக கடமையாற்றியவர்களின் தற்காலிக சேவையை அவர்களது இன்றைய சேவா காலத்துடன் சேர்த்துக் கொள்ளுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுதல். அதேபோன்று இப்போது அரசாங்க பாடசாலைகளிலும் வித்தியாதிபதி நிர்வாகப் பாடசாலைகளிலும் கடமையாற்றிவரும் ஆசிரியர்கள், முன்னர் தோட்டப் பாடசாலை எதிலும் ஒருவருடம் கடமையாற்றியிருந்தால் அந்தச் சேவையையும் அவர்களது சேவைகாலத்துடன் சேர்க்கப்படல்வேண்டும்.

வித்தியாதிபதியின் நிர்வாகத்தின்கீழ் உள்ள பள்ளிக்கூடங்களின் முழுப்பொறுப்பையும் அரசாங்கம் எடுக்க நேர்ந்தால், இங்கு கடமையாற்றும் ஆசிரியர்கள், அரசாங்கம் எடுத்தபின் 10 வருட சேவையாற்றுமுன்னரே கால்பங்கு பென்ஷன் உரிமையுடன் இளைப்பாற வசதியளிக்கப்படல் வேண்டும்.

வித்தியாதிபதியின் கீழுள்ள பாடசாலைகளிலுள்ள சிறு தொழிலாளருக்கும் அரசாங்கம் பாடசாலைகளிலுள்ளவர்களுக்குப் போன்று ஒரே மாதிரியான சம்பளமளிக்கப்படல் வேண்டும்.

பாடசாலைத் தேசீயமயத்துக்குமுன் உதவிபெறும் பாடசாலைகளில் சேவை செய்த ஆசிரியர்களை இடமாற்றஞ் செய்யக்கூடாது. ஏனெனில் இவர்கள் இந்தக் கட்டுப்பாட்டுடனேயே நியமனம் பெற்றனர்.

வித்தியாபகுதியின் முகாமைக்குரிய பாடசாலைகளில் இருக்கும் ஆசிரியர்கள் அரசாங்க ஊழியராக மாற்றப்படும் போது அம்மாற்றத்தை ஏற்கமறுக்கும் 10 வருட சேவை பூர்த்தியாகாத ஆசிரியர்களுக்கும் நஷ்டஈடு கொடுத்து இளைப்பாறுவதற்கு அரசாங்கம் வகை செய்ய வேண்டும்.

இப்பத்திரிகை ஈழநா டுலிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலைவீதி '63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 7-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.